

# கலை முரசு
# பவள விழா

சிறப்பு மலர்

(1938 - 2013)

## பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம்
## மடுல்சிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை முரசு பவள விழா



இதழாசிரியர்
**செல்வி S. நாகேஸ்வரி**

பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம்
மடுல்சிமை

2013.10.19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை முரசு
# பவள விழா
## சிறப்பு மலர்


இதழாசிரியர் : செல்வி S.நாகேஸ்வரி
இணை இதழாசிரியர் : திரு M.ஸ்ரீகோணேஸ்
மலர்க் குழு : திரு. R.S.முத்துக்குமார் (தலைவர்)
: திருமதி: இராஜ்வதனி சுந்தரமூர்த்தி
: திருமதி: I.கோகிலவாணி யுரேஸ்குமார்
: செல்வி: S.ஜோதிலட்சுமி
: திருமதி: R.அருந்ததி
: செல்வி: R.சிவரஞ்சனி

புகைப்படங்கள : திரு.இராஜேந்திரன்
வெளியீடு: மரல்க்குழு : பது/ஊவாக்கலை த.வி 2013
திகதி : 2013.10.19
பதிப்புரிமை : பது/ஊவாக்கலை த.வி, மடுல்சீமை
பிரதிகள் : 300
அச்சுப்பதிப்பு
அட்டைப்பட வடிவமைப்பு : பிரவுன்கீ கிர.ஃ.பிக்ஸ் - பதுளை



இம்மலரில் பிரசுரமாகியுள்ள ஆக்கங்கள் தொகுப்புகளுக்கு அவற்றை ஆக்கியோரும் தொகுத்தளித்தவர்களுமே பொறுப்பாளிகளாவர். இவற்றுக்கு இதழாசிரியரோ மலர்க்குழுவோ எவ்வகையிலும் பொறுப்பாளிகள் அல்ல.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

## சூரியனை வாழ்த்த வந்த
## பட்டாம் பூச்சிகளின் வாழத்து மடல்

ஊவாக்கலை மண்தன்னில் மிளிர்கின்ற கலைக்கூடமே
ஆயிரம் அறிவாளர் உருவாக்கமே!
என்றும் தழைத்தோங்கும் செழித்தோங்கும் எம்மாலயம்.
அதற்கு கடிவாளம் எந்நாளும் குரு சேவையே!

நீருற்றுக் கூட நீண்ட நாளில் நூர்ந்து போகலாம்.
நீயிரைத்த அறிவு என்றும் தீர்ந்து போகுமா?
அன்னை தமிழ் வித்தியாலயம் வாழ்க வாழ்கவே.
மண்ணே அது மதியுருவாய் மிளிர வாழ்கவே...

அன்னைக்கு அகவை எழுபத்தைந்து
அந்த அற்புத பவள நாளைக் காண ஆனந்தம் பொங்குது.
நூற்றாண்டு காண நாம் வாழ்வோமா?
ஆண்டாண்டு காலம் எம் அன்னை வாழ்வாள்.

அன்று நான்கு தூண்களுக்கிடையே ஒரு குடிசை
இன்று ஓடும் வண்ணச்சீட்டும் கொண்ட மூன்று கட்டிடம்.
அன்று காட்டை வேலியாகவும்
பற்றை புதரை சூழவும் கற்கள் நிறைந்த
காடாய் காட்சி தந்ததே.

இன்று எம்மதிபரின் முயற்சியிலே
இயற்கை எழில் கொஞ்சும் பார்ப்போர் மனதை
பற்றியெடுக்கும் சுற்றாடலை பதித்து
ஏழிலாய் காட்சியளிக்கும் கலைகூடமாய் கண்ணை கவருகிறதே.

அன்றிலிருந்து புள்ளிக்கு இன்று வண்ணக் கோலம் அமைப்பதற்கு நிஜமாக
அரும்பாடுப்பட்ட அத்துனை உள்ளங்களுக்கும் பாராட்டுக்கள்.
ஊவாக்கலை வித்தியாலயம் வாழ்க வாழ்க.
உன்னதமான அறிவாந்தோர் வாழ்க வாழ்க.
காலம் எல்லாம் கலை வளர் கல்விக் கூடமே.
நாம் வாழும் காலம் யாவும் உனக்கு நன்றி நன்றி
விண்ணும் மண்ணும் மறையும் காலம் வந்த போதிலும்
எம் நினைவில் உன்னை நிறுத்தி வைத்து வாழ வேண்டுவோம்.

நில்லா உலகில் பல் காலம் நீ வாழ்க வாழ்கவே!
கல்லா மனிதர் அனைவரும் கற்க நீ வாழ்க வாழ்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை இலச்சினை

## இலக்கு – Vision

சமூகத்திற்கும் நாட்டிற்றும்
நற்பிரஜைகளை உருவாக்குதல்.

## நோக்கு – Mission

சிறந்த ஆரம்ப கல்வியில் கலை, கலாசாரத்தில் துரித வளர்ச்சியும், சமூக நோக்கமும் கொண்ட மாணவ சமுதாயத்தை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

அதிகாலையில் தினமும் கடவுளை வணங்கி

ஆசிகள் வாங்கிடுவோம் - நாம் ஆசிகள் வாங்கிடுவோம்.

கல்வியில் மேன்மையும் ஒழுக்கத்தின்

ஊயர்வும் அடைந்திட இலட்சிய வழி நடப்போம்

நாம் இலட்சிய வழி நடப்போம்.

ஊவா பள்ளியில் சேவலும் கூவும்

நல்லோராக வழி நடப்போம் - நாம்

நல்லோராக வழி நடப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. ஆசிச்செய்தி சிவஸ்ரீ ச.செந்தமிழ்ச்செல்வன் சர்மா
2. ஆசிச்செய்தி சிவஸ்ரீ சிவக்குமார் சர்மா
3. அதிபரின் உள்ளத்திலிருந்து
4. உப அதிபரின் உள்ளத்திலிருந்து
5. வலய கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
6. பிரதி கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
7. கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
8. திரு.N.செல்வரட்ணம் உதவி கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
9. திரு.S.S.மனோகரன் உதவி கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
10. திரு.G.இளையத்தம்பி உதவி கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
11. வாழ்த்துச் செய்தி கௌரவ.பெ.சுரேஸ் உபத்தலைவர் லுணுகலை பிதேச சபை
12. பிரதேச அதிபர்களின் வாழ்த்துச் செய்திகள்
13. வாழ்த்துச் செய்தி திருமதி. S.நவமணி - முன்னாள் அதிபர்
14. வாழ்த்துச் செய்தி திரு. R.S.இராஜேந்திரன் - முன்னாள் அதிபர்
15. வாழ்த்துச் செய்தி திரு. T.சரவணபவா - முன்னாள் அதிபர்
16. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் வாழ்த்துச் செய்தி
17. பவள விழா காணும் பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயத்தின் வரலாற்று நோக்கு
18. ஆரோக்கியம் தரும் ஆசனங்கள் - திரமதி.R.அருந்ததி ஆசிரியை
19. சாலை வரலாறு - கவிஞர் மடுல்சீமை சதாசிவம்
20. மாணவர் ஆக்கங்கள்
21. டயரியில் பதிந்த தத்துவங்கள் - ஆசிரியை S.ஜோதிலட்சுமி
22. புலமைப்பரிசில் பரீட்சைகளில் பாண்டித்திய மட்டத்தை எட்டிய மாணவர்கள் விபரம்
23. மணல் வீடு - சிறுகதை ஆசிரியை செல்வி.R.சிவரஞ்சனி
24. மாணவர் ஆக்கங்கள்
25. காலநிலை மாற்றமும் உலகம் எதிர் நோக்கும் பிரச்சினையும் - S.நாகேஸ்வரி ஆசிரியை
26. 1938 தொடக்கம் எங்கள் அதிபர்கள்
27. 1938 தொடக்கம் எங்கள் ஆசிரியர்கள்
28. தமிழ் எழுத்துக்களின் தனித்துவம் - ஆசிரியை வு.ராஜ்வதனி
29. ஆரம்ப கல்வி புலமும் ஆசானும் - மு.ஸ்ரீகோணேஸ் ஆசிரியர்
30. மாணவர் ஆக்கங்கள்
31. ஒழுக்கக் கல்வியின் அவசியம் ஓர் பார்வை...! ஆசிரியை ஐ. கோகிலவாணி
32. மாணர் ஆக்கங்கள்
33. பெருமை மிக்க நமது ஆத்திச் சூடி ஆங்கில விளக்கத்துடன் - அதிபர்
34. வாழ்த்துக் கவிதை - T.சரவணபாவா முன்னால் அதிபர்
35. நன்றி நவிலல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ ச. செந்தமிழ் செல்வன் சர்மா
ஆலய பிரதம குரு
ஊவாக்கலை

# ஆசிச் செய்தி

**"கேடில் விழுச்செல்வம் கல்வி - ஒருவருக்கு மாடல்ல மற்றுப் பிற"**

கல்விச் செல்வத்தின் பெருமையையும், வலிமையையும் வள்ளுவப் பெருந்தகை ஆணித்தனமாக அன்றே கூறியுள்ளார். சிறந்த கல்வியைப் பெற்று வாழ்க்கையை வளம்படுத்திக் கொள்ள திறவு கோளாக அமைவது பாடசாலைகளே. அந்த வகையில் ஊவாக்கலைப் பிரதேச மாணவர்கள் கல்வி பயில்வதற்கு நல்ல களமாக பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் அமைந்துள்ளதை நான் அறிந்துள்ளேன். இங்கு பாடவிதான செயற்பாடுகளுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளும் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு சான்றாக விளங்கும் 75வது ஆண்டு பவள விழா ஆசிரிய மாணவர்களின் தேடலுக்கு வழிசமைக்கிறது. இதனை செயற்படுத்தும் குழாத்திற்கு வாழ்த்துக்கள். காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு 75வது ஆண்டு விழா பல்வேறு பரிநாமங்களில் வெளிவருவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

மேலும் இம்முயற்சி தொடர்ச்சியாக இடம்பெற்று மாணவர்களுக்கும் கல்விச் சமூகத்திற்கும் பல வழிகளில் பயனளிக்க வேண்டுமென ஆசி கூறுகிறேன்.

"75வது ஆண்டு பவள விழாவிற்கு எனது ஆசிகள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் பவள விழா கலைமுரசு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். மடுல்சீமை நகரின் நடுவிலே கலாசார விழுமியங்களை பேணி தலை நிமிர்ந்து நிற்கின்ற இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றிய அனைத்து சேவையாளர்களையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.


அன்றும், இன்றும் வசதி குறைந்த மாணவர்கள் கல்வி பெற விரைந்தோடி வரும் பாடசாலையாக இருக்கும் அதே வேளையில் பாடசாலைக் கல்வியில் இடையில் தவறிய மாணவர்களை அனைத்து பரிகாரமும் செய்து அவர்களை மேம்படுத்தும் வகையிலும் இப்பாடசாலை பெறும் பங்காற்றி வருகிறது. இவ்வாறாக மாணவர்களை மேம்படுத்தும் பாடசாலையின் சேவை தொடர வாழ்த்துகிறேன்.

பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை பங்கு பெறச் செய்து வெற்றி பெற முன்னின்று உழைத்த அதிபர், பயிற்றுவித்த ஆசிரியர்களை பாராட்டுவதோடு எதிர்காலத்தில் இவ் வித்தியாலயத்தின் புகழ் மென்மேலும் ஓங்குக.

சிவஸ்ரீ. சிவக்குமார் சர்மா
ஸ்ரீ கதிர் வேலாயுத ஆலயம்
3ம் கட்டை,
பதுளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின் உள்ளத்திலிருந்து...!

எமது பாடசாலையின் 75 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் பவளவிழா நினைவு மலரான "கலை முரசு" மலரில் உள்ளத்தில் உதித்த உண்மைகளை வெளிப்படுத்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பசறை வலயம், பசறை கோட்டக் கல்விக்கு உட்பட்ட கஷ்டபிரதேச பாடசாலையான எமது பாடசாலை 1-5 வரையான வகுப்புக்களை கொண்டுள்ளது.

பல குறைபாடுகளுக்கு மத்தியில் பல இன்னல்களையும் தாண்டி வருகிறது. அபிவிருத்தியை நோக்கி தனது பயணத்தை ஆரம்பிக்கும் இச்சந்தர்ப்பத்தில் அதன் வளர்ச்சிக்காக உதவிவரும் ஆசிரியர்கள்,கல்வித் திணைக்கள அதிகாரிகள்,பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கம் பெற்றார்கள் நலன்விரும்பிகள்,தொண்டு நிறுவனங்கள், அரசியல்வாதிகள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் தொடர்ந்து எமக்கு சக்தியையும் தைரியத்தையும் தந்துதவ வேண்டும் எனவும் எல்லாம் வல்ல எம்பெருமானாகிய ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமியை வேண்டுகின்றேன்.

பவளவிழா நினைவு மலரை வெளியிட ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்களுக்கும்,மாணவர்களுக்கும்,ஆசிச்செய்தி,வாழ்த்துச் செய்தி வழங்கிய பிரமுகர்களுக்கும்இமதகுருமாருக்கும்இகுறுகிய காலத்தில் மலராக உருவாக்கித் தந்த பதுளை பிரவுன்கீ நிறுவனத்திற்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக பல சுமைகளுக்கும்,கஸ்டத்திற்கும் மத்தியில் சிரமம் பாராது மலரை வெளியிட தம்மை அர்ப்பணித்த மலர் வெளியீட்டுக் குழுவுக்கும் என் பாராட்டுக்கள்.

எமது கூட்டிணைவு வெளிப்பாடான இப்பவளவிழா சிறப்பாக நடந்தேற இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

"வளர்க கல்விப் பணி"

**R.S.முத்துக்குமார்**
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உப அதிபரின் உள்ளத்திலிருந்து...!

சுரங்களின் சங்கமத்தில் சுகமான இராகம் பிறக்கிறது. மலர்களின் சங்கமத்தில் மனம் கவரும் கனி கிடைக்கிறது. நூல்களின் சங்கமத்தில் நல் அறிவு கிடைக்கிறது. கலைகளின் சங்கமத்தில் கல்விக் கூடங்கள் சங்கமிக்கிறது. புத்தாக்கங்களின் சங்கமத்தால் புத்தகம் பிறக்கிறது.

கலை நயம் மிக்கோரின் கன்னி முயற்சியால் உங்கள் கரங்களில் தவழ்கிறது. "கலை முரசு" காத்திரமான கருத்துக்களை தாங்கி வரும் இந்நூலானது சின்னஞ்சிறார்களின் சிமிழ் விரல்களினால் சிந்தித்தவையும் அறியாமை எனும் இருளகற்றி அறிவொளி புகட்டிடும் ஆசான்களின் ஆக்கங்களையும் அறிவு சார்ந்த பெரியோர்களின் ஆசிச் செய்திகளையும் விழாவிற்கு வித்திட்டு விளம்பரங்களை தந்துதவிய வர்த்தக பிரமுகர்களின் விலாசங்களையும் தாங்கி வருகிறது என்றால் மிகையாகாது.

வளரும் சிறார்களின் உள்ளத்தை வளப்படுத்தும் நோக்கிலும் பவள விழா காணும் பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயத்தின் நினைவு சின்னமாகவும் வெளிவரும் இந்நூலை வளரும் சிறார்கள் மட்டுமன்றி வளர்ந்தோரும் படித்துச் சுவைக்கும் பவளமாக கருத வேண்டும். "நூல் பல கல், நேர் பட ஒழுகு" எனும் ஔவை மொழிக்கு அமைய பல அறிவு சார்ந்த நூல்களைத் தேடி படிப்பதனூடாக வாழ்க்கையில் மேல் நிலைக்கு செல்லக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.


எனவே "கலை முரசு" எனும் நூலை நுனிப்புல் மேயாது நுனுகி ஆராய்ந்து வாசித்துப் பயன் பெறுவோம்.

நன்றி

**திரு. ம. ஸ்ரீகோணேஸ்**
உப அதிபர்
பது/ஊவாக்கலை த.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எங்கள் அதிபர் R.S .முத்துக்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபருடன் ஆசிரியர் குழாம்



இடமிருந்து வலமாக திருமதி.T.ராஜவதனி, செல்வி.R.சிவரஞ்சனி, செல்வி.S.ஜோதிலட்சுமி, R.S.முத்துக்குமார்(அதிபர்), திரு.M.ஸ்ரீகோணேஸ், செல்வி.S.நாகேஸ்வரி, திருமதி.I.கோகிலவாணி, திருமதி.R.அருந்ததி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் நான்கு மாணவர்கள் வகுப்பு ஆசிரியருடன்



தரம் மூன்று மாணவர்கள் வகுப்பு ஆசிரியருடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் இரண்டு மாணவர்கள் வகுப்பு ஆசிரியருடன்



தரம் ஒன்று மாணவர்கள் வகுப்பு ஆசிரியருடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் ஐந்து மாணவர்கள் வகுப்பு ஆசிரியருடன்



தரம் இரண்டு மாணவர்கள் வகுப்பு ஆசிரியருடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...!



மலையகத்தின் மணம் வீசும் தேயிலை செடிகளுக்கு நடுவில் கலைக்கூடமாக திகழும் பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் 75ஆவது ஆண்டினை பவளவிழாவாக கொண்டாடுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

மடுல்சீமையின் கல்விக் கண்ணெணத் திகழும் எமது பாடசாலையானது சமூகத்துக்கு சிறந்த பிரஜைகளை உருவாக்குகிறது என்பது மட்டுமல்லாது எமது சகோதர ஆசிரியர்களும் மாணவ செல்வங்களுக்கும் களமமைத்துக் கொடுக்கும் வகையில் இந்த "கலை முரசு" உருவாகின்றமையினை முன்னிட்டு மற்றற்ற மகிழ்ச்சியே.

தங்களின் நெஞ்சங்களில் எழுந்த வாழ்நிலை ஆக்கங்களை சிறுகதைகளாகவும் கட்டுரைகளாகவும் பேனாமுனைகளுடாக பேசிய சகோதர ஆசிரியர்களே! எழுத்தாளர்களே! நீங்கள் தனித்தனியே மணிகளாக தொகுத்தவற்றை தொகுத்து உங்களிடையே சமர்ப்பிக்கின்றோம்.

இக் "கலை முரசு" உருவாவதற்கு எங்களுக்கு பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றிகளை சமர்ப்பிப்பதோடு எமது மாணவ செல்வங்களுக்கும் சக ஆசிரியர்களுக்கும் தொடர்ந்தும் களம் அமைத்து கொடுக்க வேண்டும். இக் "கலை முரசு" ஆக்கங்களை தந்தவர்களுக்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

செல்வி. S.**நாகேஸ்வரி**
*SLTS – 3I Social science*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# පස්සර කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂක තුමාගේ පණිවිඩය

පස්සර අධ්‍යාපන කලාපයේ ඇති පාසල් අතරින් හා විශේෂයෙන් දෙමළ මාධ්‍ය පාසල් අතරින්ද වඩාත් වේගයෙන් ප්‍රදේශ වාසින් ජනතා වගේ අපේක්ෂාවන් බ/ලූණුවත්තැලේ දෙමළ විද්‍යාලය මුල් තැනක ලා මම සලකමි. අප ප්‍රදේශයට ආවේණික වූ මානව හා භෞතික සම්පත් හිඟය නොසලකා හීනව ඇති එම සම්පත් නොයෙකුත් ක්‍රම මගින් දරුවන්ට ලබා දී ඉගෙනුම් ඉගෙන්වීම් නිසි අයුරින් සිදුකරන විදුහල්පති තුමා ප්‍රමුඛ ආචාර්ය මණ්ඩලය අපට ආඩම්බරයකි. මෙම ගුරු මණ්ඩලයටම ගැලපෙන දෙමාපියන් හා දරු දැරියන් දම්වැලක පුරුක් මෙනි.

එම නිසා මෙවැනි අභිමානවත් පාසලක 75 වන ජන්ම සංවත්සරය උදෙසා පණිවුඩයක් ලබා දීමට ලැබීම සතුටට කරුණකි. 1938 වර්ෂයේ සිට ආරම්භවූ මෙම පාසල අද වන විට ප්‍රදේශයේ වඩාත්ම ජනප්‍රිය දෙමළ මාධ්‍ය පාසලක් බවට ඔබ පාසල පත්කිරීමෙහිලා නිවැරදි නායකත්වය හා ගුරු සිසු දෙමාපියන් කැපවීම නිතැනින්ම අගය කරමි.

ප්‍රදේශයේ සිසු පරපුර වඩාත් ඵලදායී පුරවාසියන් බවට පත් කිරී පෙරදැරි කරගෙන සිදුකරන්නා වූ මෙම සුවිශේෂ පියවර ඇත්ත වශයෙන්ම කාලීන අවශ්‍යතාවයකි. ඔබ පාසලේ කටයුතු දිනෙන් දින සාර්ථක වේවා යැයි මම ප්‍රාර්ථනා කරමි.

M.A.S. **පෙරේරා**
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂක
පස්සර



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ආර්.එම්.හේමලතා රත්නායක
# නියෝජ්‍ය අධ්‍යාපන අධ්‍යක්ෂතුමියගේ පණිවිඩය

බ/ඌවකැලේ විද්‍යාලයට 75 වසරක් සපිරීම නිමිත්තෙන් සුභ පැතුම් පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම මහත් භාග්‍යයක් කොට සලකමි.

රකට දියුණුමේ තීරණාත්මක සාධකය වන්නේ අධ්‍යාපනයයි. ඒ තුළින් පාසලට පැවරෙන වගකීම් සම්භාරය සුළුපටු නොවේ. අනාගත අභියෝගයන්ට මුහුණ දෙමින් ජීවත් වීමට ඉගෙනීමට අවශ්‍ය ඉගෙනුම් පරිසරයක් ඇති කිරීමට පාසල තුළින් ක්‍රියාත්මක වන්නා වූ ආකල්ප කුසලතා හා නිපුණතා ලබා දෙමින් බ/ඌවකැලේ දෙමළ විද්‍යාලය මෙතෙක් පැමිණි ගමන් මාර්ගය ප්‍රශංසනීය වේ.

අප්‍රමාණ ගැටළු වලට මුහුණ දෙමින් ඒවා තම ශක්තිය බවට හරවා ගනිමින් අවට ප්‍රජාව සමග අත්වැල් බැඳ ගනිමින් විදුහල්පති ගුරුවරුන් හා සිසුන් විදුහලේ කීර්තිනාමය රඳවා ගැනීමට මෙම කාලය තුළ ගත් ධෛර්‍යය පාසලේ කීර්තිනාමය තව දුරටත් දිදුලවා ලීමට ඔබ සැම ගන්නා උත්සහයට මාගේ ප්‍රශංසාව පුද කරමි.

**ආර්.එම්.හේමලතා රත්නායක**
නියෝජ්‍ය අධ්‍යක්ෂතුමිය
කලාප අධ්‍යාපනය කාර්යාලය,
පස්සර.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# පස්සර කොට්ඨාශ අධ්‍යාපන අධ්‍යක්ෂක තුමාගේ පණිවිඩය

පස්සර අධ්‍යාපන කොට්ඨාශයේ පාසල් අතර නව අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණ හඳුනාගනිමින් ඒ තුලින් සිසුන් අගය කරමින් එය ජාතික මට්ටම හා ඉන් එපිටට ගෙන යාමට වෙර දරණ හා කටයුතු කරන පාසල් අතර ඔබ විදුහල ඉදිරියෙන්ම සිටින බව ආඩම්බරයෙන් පවසමි. ඔබ විදුහලේ 75 වන ආරම්භක සංවත්සරය උදෙසා කරන්නා වූ මෙම වැඩ සටහනම ඉහත කරුණට හොඳම නිදසුනක් බව පෙනේ.

මානව හා භෞතික සම්පත් අවශ්‍යතාවයන්ද බෙහෙවින් තිබිය දී එම අවශ්‍යතාවයන් ද නොයෙකුත් ක්‍රමෝපායන් මගින් සපුරා ගෙන ඔබ ලත් විවිධ ජයග්‍රහණ අප සැමටම ආඩම්බරයකි ආදර්ශයකි.

දේසේ පරපුර සියළු කුශලතාවලින් පිරි පුරවැසියන් බවට පත් කරන්නට ඔබ සිදු කරන මෙම දායකත්වය වචන වලින් ප්‍රකාශ කිරීමටත් ප්‍රමාණවත් නොමැති මෙවෙන් එළඳායි උත්සාවයක් මුල් කරගෙන පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීමද සතුටකි.
ඔබ පාසලේ කටයුතු දිනෙන් දින දියුණු වේවා.

R.N.T.**නිශාන්ත**
කොට්ඨාශ අධ්‍යාපන අධ්‍යක්ෂක
කොට්ඨාශ අධ්‍යාපන කාර්යාලය
පස්සර



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதவிக் கல்வி பணிப்பாளர்

# திரு. N. செல்வரட்ணம் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் 75வது வருட பூர்த்தி விழாவை சிறப்பிக்கும் முகமாக வெளிவரும் பவள விழா சிறப்பு மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். காலம் காலமாக மடுல்சீமை பிரதேசத்தில் கல்வியலாளர்களையும், புத்தி ஜீவிகளையும் உருவாக்குவதில் பெரும் பங்களிப்பு வழங்கிய ப/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயத்தின் 75வது வருட பூர்த்தியில் பணியாற்றிக்கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்களை பாராட்டுவதோடு, வித்தியாலயத்தின் செயற்பாடுகளுடன் பல சந்தர்ப்பங்களில் நானும் ஒருவனாக இணைந்து செயற்பட்டதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துக் கொண்டிருக்கும் அதிபர் திரு. R.S முத்துகுமார் அவர்களின் சிறந்த ஒரு நிர்வாகி மட்டுமன்றி வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தன்னால் இயன்றளவு பெரும் பங்காற்றிக் கொண்டிருப்பவர். ப/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயத்தின் பணி மென்மேலும் சிறப்புற்று விளங்க என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. N. செல்வரட்ணம்.**
உதவிக் கல்வி பணிப்பாளர்
வலய கல்வி காரியாலயம் - பசறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசறை வலய கல்வி காரியாலய உதவிக் கல்வி பணிப்பாளர்

# கலாநிதி S.S. மனோகரன்

## வாழ்த்துச் செய்தி

மலையக மண்ணில் மைந்தர்களை உருவாக்கும் பணியில் தன்னுடைய சிறய பங்கையும் பெரிய பங்காகக் ஏற்றுக் கொண்டிருக்கும் ஊவாக்கலை தமிழ் வித்தியாலயத்திற்கு எனது பாராட்டுடன் கூடிய வணக்கங்கள்.

ஒரு நிறுவனத்தை ஆரம்பிக்க கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் பவளவிழாவை எட்டிப் பிடித்திருக்கும் இந்நிறுவனம் போற்றத்தக்கது. அதுவும் 75 வருடத்தை எட்டிப் பிடித்த எத்தனையோ பாடசாலைகள் விழா எடுக்க முடியாமல் மௌனம் சாதிக்கும் போது இப்பாடசாலை விழாக்கோலம் பூண்டு கௌரவத்தை பெறுகிறது, என்றால் ஊவாக்கலை தமிழ் வித்தியாலயாலத்தின் அதிபர் திரு.சு.ளு.முத்துக்குமார் அவர்களும் அவரின் தலைமையில் இயங்கும் ஆசிரியர்கள் பெருந்தகைகள்,பாடசாலை அபவிருத்திச் சங்க குழு,பழைய மாணவர்கள இவர்களை வாழ்த்தத்தான் வேண்டும். பாராட்டத்தான் வேண்டும்.

கடந்த காலங்களில் மடுல்சீமை பகுதியில் மிக வேகமாக பெயர் பதித்தது வரும் ஊவாக்கலை தமிழ் வித்தியாலயாலம் இன்னும் பல அறிவாளிகளை உருவாக்கி அறிவு சார்ந்த பண்பு சார்ந்த சமூகத்தில் தனது பெயரையும் பதித்துக் கொள்ள எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், எனது இதயத்துடிப்பு எனது சமூகத்தின் துடிப்பு என இயங்கும் அதிபர் திரு.R.S.முத்துக்குமார் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி S.S.மனோகரன்**
உதவிக் கல்வி பணிப்பாளர்
வலய கல்வி காரியாலயம் - பசறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. G. இளையத்தம்பி

## உதவிக் கல்வி பணிப்பாளர் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலய பவள விழா சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். மடுல்சீமை நகரின் நடுவிலே கலாசார விழுமியங்களை பேணி தலை நிமிர்ந்து நிற்கின்ற இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றிய அனைத்து சேவையாளர்களையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

வசதி குறைந்த மாணவர்கள் கல்வி பெற விரைந்தோடி வரும் பாடசாலையாக இருக்கும் அதே வேளையில் பாடசாலைக் கல்வியில் இடையில் தவறிய மாணவர்களை அனைத்து பரிகாரமும் செய்து அவர்களை மேம்படுத்தும் வகையிலும் இப்பாடசாலை பெறும் பங்காற்றி வருகிறது. இவ்வாறாக மாணவர்களை மேம்படுத்தும் பாடசாலையின் சேவை தொடர வாழ்த்துகிறேன்.

பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை பங்கு பெறச் செய்து வெற்றி பெற முன்னின்று உழைத்த அதிபர், பயிற்றுவித்த ஆசிரியர்களை பாராட்டுவதோடு எதிர்காலத்தில் இவ் வித்தியாலயத்தின் புகழ் மென்மேலும் ஓங்க வாழ்த்துகின்றேன்.

**திரு. G. இளையத்தம்பி**
உதவிக் கல்வி பணிப்பாளர்
வலய கல்வி காரியாலயம் - பசறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊவா மாகாண சபை அமைச்சர்

# கௌரவ. செந்தில் தொண்டான் அவர்களின்
## வாழ்த்துச் செய்தி

ஊவா மாகாணத்தின் பசறை கல்வி வலயத்தின் பசறை கல்விக் கோட்டத்தில் அமைந்திருக்கும் பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் பவளவிழா வயதைக் கண்டு இன்று விழாக் கொண்டாடுகிறது.

கல்விக்கென செய்யும் பணியே கண்ணியம் பொருந்தியது. எனது அமைச்சில் இருந்து இப்பாடசாலை நலனுக்காக செய்த பணிகளுக்காக அப்பழுக்கற்ற ஆத்ம திருப்பி என் இதயத்தில் இருந்து உணர்வுகளாய் வெளிப்பட்டுக் கொள்கிறது.

இப்பாடசாலை பழமைகளை களைந்து நவீனம் பூத்து நிற்கும் கலா பூமியாக நடைமுறைச் சவால்களுக்கு முகங்கொடுத்து நெஞ்சை நிமிர்த்தி நிற்கவேண்டும் என்பது என் அவா!

இலக்கை அடைவதற்கு போதிய வளங்கள் இல்லாத நிலையிலும் இருக்கின்ற வளங்களை உள்வாங்கி உயர்வான சேவையை இதுவரை காலமும் நல்கிய அதிபர்,ஆசிரியர் பெருந்தகைகளுக்கு நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கான அடிப்படைத் தேவை கல்வியே என்பது கருத்தொருமித்த உண்மை. இந்த உண்மை இந்தக் கலையகத்தின் ஊடாக வெளிப்பட வேண்டும். உயர் கல்வியை எட்டிப் பிடிக்கக் கூடிய மாணவர் சமூகத்தை,தலைவர்களை வெளிக் கொணர்வதில் இப்பாடசாலை முக்கியம் பெற்று விளங்க வாழ்த்துரை வழங்குவதோடு, இக்கலையகத்தின் அதிபர் திரு.R.S.முத்துக்குமார் அவர்கள் சிறப்பான நிர்வாக ஆளுமையில் மேலும் ஜெயம் பெற வாழ்த்துகின்றேன்.

**கௌரவ. செந்தில் தொண்டான்**
ஊவா மாகாண சபை அமைச்சர்
பதுளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசறை இலங்கை சுதந்திரக் கட்சி பிரதான அமைப்பாளர்
அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் இணைப்புச் செயலாளர்

# கௌரவ. வடிவேல் சுரேஸ் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

பதுளை மாவட்டத்தின் பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயத்தின் பவளவிழா சிறப்பு மலர் "கலைமுரசுக்கு" வாழ்த்துச் செய்தி வழங்குவதில் முதற்கண் நான் ஆனந்தம் அடைகின்றேன்.

நீண்ட காலமாக அறிவொளி வீசிவரும் இவ்வித்தியாலயத்தின் 75 வருட பூர்த்தி என்பது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும். எனது அரசியல் பயணம் தொடக்கம் இன்று வரை இந்தப் பாடசாலையுடனும் இக்கிராமத்துடனும் மிக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. குறிப்பாக மத்திய அரசாங்கத்தில் அங்கம் வகித்தபோது பௌதீக,ஆசிரிய வளங்களையும் பெற்று கொடுத்துள்ளேன். அதேபோல் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரிய உதவியாளர்களாக பெற்றுத் தருவதிலும் நான் முன்னின்று உழைத்தேன்.

எனவே இச்சமுதாயத்தின் மணிக் கோபுரமாக விளங்கும் இப்பாடசாலை அண்மைக் காலமாக அடைந்துவரும் முன்னேற்றங்களை நான் பாராட்டுகின்றேன். அத்துடன் பாடசாலை அதிபர் திரு.R.S.முத்துக்குமாரை மனதாரப் பாராட்டுகின்றேன். அவரது பணி காலத்தின் கட்டாயம்.
மேலும் அவருக்கு உரம் சேர்க்கும் ஆசிரியர் தெய்வங்களை அகம் மகிழ்ந்து பாராட்டுகின்றேன். அவர்களது சமூகப் பணி சமூகத்தின் அச்சாணி.

இறுதியாக 75வது ஆண்டு விழாவிற்கு உதவிய
அனைத்து நல்லுள்ளங்களையும் வாழ்த்துகின்றேன்.

**வாழ்க கலைமுரசு! வாழ்க கலைக் கூடம்!.**

என்றும்
அன்புடன்

**வடிவேல் சுரேஸ்**
பசறை இலங்கை சுதந்திரக் கட்சி பிரதான அமைப்பாளர்
அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் இணைப்புச் செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊவா மாகாண சபை உறுப்பினர்

# கௌரவ. A .அரவிந்தகுமார் அவர்களின் வாழ்த்துச் செய்தி

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தின் பசறை கல்வி வலயத்திற்கு உட்பட்ட பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயத்தின் பவளவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மிகவும் மன மகிழ்ச்சி அடைகின்றேன்.

1938ம் ஆண்டு பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று ஓர் போசாக்கு பாடசாலையாக வீரு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது.

கல்வித்துறையிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் துரித வளர்ச்சிகண்டு வரும் இவ்வித்தியாலய மாணவர்கள் விளையாட்டுத் துறையில் தேசிய மட்டம் வரை சென்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இங்கு கல்விப் பயிலும் மாணவர்களின் ஒழுக்கம் சிறந்தோங்கி இருப்பதை வலய கல்விப்பணிமனையின் அதிகாரிகளின் பல்வேறு கூட்டங்களில் பாராட்டிப் பேசுவதை கண்கூடாகப் பார்த்தும் கேட்டும் இருக்கின்றேன்.

இப்பாடசாலையில் கல்விப் பயின்ற மாணவர்கள் இன்று ஆசிரியர்களாக, அதிபர்களாக, வெளிக்கள உத்தியோகஸ்தர்களாக இவ்வாறு பல்வேறுப்பட்ட அரச, அரச சார்பற்ற துறைகளில் தொழில் புரிந்து வருகின்றனர். 75 வருடங்களை பூர்த்தி செய்யும் இப்பாடசாலை இன்னும் பல நூற்றாண்டுகள் இப்பகுதியில் வாழும் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை வழங்க இறைவனிடம் வேண்டி நிற்பதுடன் எனது உள்ளங்கனிந்த பாராட்டுக்களையும் ஆசியையும் கூறிக்கொள்கின்றேன்.

**A. அரவிந்தகுமார்**
ஊவா மாகாண சபை உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுணுகலை பிரதேச சபை உபத் தலைவர்

# பெரியண்ணன் சுரேஸ் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

1938ஆம் ஆண்டில் மடுல்சீமை ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் திரு.அங்கமுத்து அதிபரால் நிறுவப்பட்டு தற்போது 75ஆவது வருடபூர்த்தி விழாவில் வெளிவரும் பவள விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஊவாக்கலை கிராம மத்தியில் அமைந்து காணப்படும் இப்பாடசாலையானது காலங்காலமாக சமூகத்தில் உயர்வான நிலைக்கு நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு தனது உழைப்பை வழங்கி வந்துள்ளது. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் காட்டிவரும் ஆர்வத்துடன் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பல வெற்றிகளை புரிந்து வருகிறது. இவ்வாறு எதிர்காலத்திலும் சமுதாயத்தின் உயர்வுக்காக இப்படசாலை சிறந்த பணியாற்ற வேண்டும் என்பது எனது அவா.

வரலாற்றை ஆவணப்படுத்தும் நோக்கிலும் சாதனைகளை பாராட்டும் நோக்கிலும் தற்போதைய அதிபரான திரு.R.S.முத்துக்குமார் பல சிரமத்தின் மத்தியில் எடுக்கப்படும் பவளவிழா அனைத்து விடயங்களிலும் வெற்றியாக அமைய வேண்டும். இம்முயற்சியில் உறுதுணையான ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை மாணவர்களின் திறமைக்கு களம் அமைத்துக் கொடுத்து இப்பாடசாலையின் கல்விப்பணி மென்மேலும் தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**பெரியண்ணன் சுரேஸ்**
உபத் தலைவர்
லுணுகலை பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச பாடசாலை அதிபர்களின் வாழ்த்துச்செய்தி

கல்வித் துறையில் பவளவிழாக் காணும் எமது பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் கல்வியில் சீரும் சிறப்பும் பெற்று வளர்கவென இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

| | |
|---|---|
| திரு. P. முத்துலிங்கம் | பது/மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம் |
| திரு. S. சுந்தர்ராஜ்- அதிபர் | பது/ரோபேரி தமிழ் வித்தியாலயம் |
| திரு. L. சிவராஜ் -அதிபர் | பது/எலமான் தமிழ் வித்தியாலயம் |
| திரு. S. பிளிப் -அதிபர் | பது/ கொக்காகல தமிழ் வித்தியாலயம் |
| திரு. D. புனிதராஜ்- அதிபர் | பது/பட்டாவத்தை தமிழ் வித்தியாலயம் |
| திருமதி . புஸ்பமேரி - அதிபர் | பது/கல்லுள்ள தமிழ் வித்தியாலயம் |
| திரு. A. ரமேஸ்- அதிபர் | பது/வெரல்லபத்தன தமிழ் வித்தியாலயம் |
| திரு. S. ராஜ்குமார்- அதிபர் | பது/மஹதோவ மேல் இல- 1 தமிழ் வித்தியாலயம் |
| திரு. V. நிரோசன் அதிபர் | பது/மஹதோவ கீழ் தமிழ் வித்தியாலயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் அதிபர்

# திருமதி. S. நவமணி அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

பதுளை மண்ணில் புகழ் பூத்த நகரமாய் விளங்கும் மடுல்சீமை குறிஞ்சி நில வளத்தால் சிறப்புறும் இம் மக்களின் அறிவு ஒளியைக் கடந்து எழுபத்தைந்து வருடங்களை ஏற்றி வைத்த பெருமை பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயத்திற்கு சாரும். பவள விழா கொண்டாடும் இப்பாடசாலையில் சேவைகள் புரிந்ததில் நானும் பெருமைப்படுகின்றேன். பவள விழாவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரும் பேராக கருதுகின்றேன்.

பல்வேறு வளப்பற்றாகுறைக்கு மத்தியிலே "இருக்கும் வளங்களில் உச்சப்பயன் பெறு" என்ற எண்ணக்கருவை செயல் வடிவாக்கி வினைத்திறன் மிக்க பாடசாலையாக இப்பாடசாலையை மாற்றியமைக்க முயன்ற, முயன்றுக் கொண்டிக்கும் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள், பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

விளையாட்டுத்துறையில் அகில இலங்கை மட்டம் வரை சென்ற வீரர்களை இப்பாடசாலை ஆசிரியர்கள் பயிற்றுவித்தமைக்கு பாராட்டு தெரிவிக்கின்றேன். மற்றும் பாடசாலையின் மாணவர்களது திறமைகளுக்கு மென்மேலும் களம் அமைய வேண்டும் என பாராட்டுகிறேன். இப்பாடசாலை மென்மேலும் சிறப்புற்று விளங்க வாழ்த்துக்கள்.

**திருமதி. S. நவமணி**
முன்னாள் அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் அதிபர்

# திரு. R.S .ராஜேந்திரன் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

1938ம் ஆண்டு ஆரம்பமான பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் 75வது ஆண்டு பவள விழாவை கொண்டாடும் இப்பாடசாலையில் சேவையாற்றியதற்கு இறைவனுக்கு என் முதல் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றேன். பாடசாலை மாணவர்களது செயற்பாடு என்பது அக்கல்வி கூடத்தில் இடம்பெறும் கற்றல் செயற்பாடுகளுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படுவதல்ல. அதற்கப்பால் அவர்களது புறக்கிருத்திய செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும். இதற்கமைய மாணவர்களது கற்றலிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மிளிர வைக்க அரும்பாடு படும் இவ்வித்தியாலய அதிபர், ஆசிரியர்களின் சேவை பாராட்டுக்குறியது.

பொருளாதார சுமையும், பணவீக்கமும் கூடியுள்ள இன்றைய சூழலில் விழா ஒன்றினை நடாத்தல், விழா மலர் வெளியிடல் என்பது பெரும் நிதிச் செலவுகளை கொண்டதாகும். எனினும் தற்போதைய அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், நிதி உதவிகளை வழங்கிய நல் உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துச் செய்தியை தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

"கல்வியும் ஒழுக்கமும் பெறுமையும் பெற்றுயர்க"

**திரு. R.S .ராஜேந்திரன்**
முன்னாள் அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் அதிபர்

# திரு. T. சரவணபவா அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் இன்று தனது பணியில் 75 வது அகவையில் காலடி வைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அத்தோடு சிறப்பு மலர் வெளியீட்டு நிகழ்வுக்காக எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அகமகிழ்கின்றேன்.

1938ம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பாடசாலையில் நான் கடமை யாற்றியுள்ளேன் என்பதை நினைக்கும் போது உள்ளம் பூரிப்படைகின்றது. மாணவர்களின் முன்னேற்றத்திலும் பாடசாலை அபிவிருத்தியிலும் முழு மூச்சாக தம்மை அர்ப்பணித்து சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் பாராட்டு தெரிவிப்பதுடன் பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம் இன்னும் பன் மடங்கு சீரும் சிறப்பும் பெற்று கல்விச் சமூகத்தில் உயர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திரு. T. சரவணபவா**<br>
முன்னாள் அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்.

# திரு . கனகசபை அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

"மக்கள் சேவையே மகேசன் சேவை" எனும் உன்னத இலக்கோடு 1938ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது தற்போது 75வது ஆண்டு பூர்த்தியை நிறைவு நாளை முன்னிட்டு சிறப்பு மலரினை வெளியிடுகிறது. எனவே இக்காலப் பகுதியில் நாங்கள் இப்பாடசாலையுடன் தொடர்பு கொண்டிருப்பதையிட்டு பெருமையடைகின்றோம்.

இப்பாடசாலையானது தனது வளர்ச்சிப்பாதையில் பல இன்னல்களை சந்தித்து இன்று நல்ல நிலையில் இருப்பதையிட்டு பெருமைப்பட வேண்டும்.

தொடர்ந்து எமது பாடசாலை தனது பணியினை சிறப்புறச் செய்வதற்கு இறையருள் கிடைக்க வேண்டி எங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு . கனகசபை**
பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனப் போட்டியில் தேசிய மட்டத்தில் 3ம் இடம்



2011ம் ஆண்டு கரப்பந்தாட்டப் போட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவள விழா காணும்
# பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம்
# வரலாற்று நோக்கு...

எழில் வனப்பு மிகு மலையகத்தில் ஊவா மாகாணத்தில் பசறை வலயக் கல்வி காரியாலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஒன்றான எமது பாடசாலை மடுல்சீமை நகரிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் மலை சிகரத்தில் அமைந்துள்ளது. இப்பாடசாலையானது வெள்ளையர்களின் ஆட்சிக் காலத்தில் 1930.06.01 திரு.அங்கமுத்து ஆசிரியர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் வெறும் மாட்டுக் கொட்டகையாகவே காணப்பட்டது. 1938 முதல் 1963 வரையிலான காலப்பகுதியில் தோட்டப் பாடசாலையாகவே காணப்பட்டது. திரு.அங்கமுத்து அவர்களே இப்பாடசாலையில் கடமையாற்றியுள்ளார்.

தொடர்ந்து 1963 – 1969 வரை திரு.சத்தியநாதன் அவர்கள் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். அவரைத் தொடர்ந்து 1969 – 1971 வரை திரு. லிங்கேஸ்வரநாதன் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். அவரைத் தொடர்ந்து 1972 – 1977 ஆண்டு வரை திரு.மனோகரன் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். எனவே அக்காலப்பகுதியில் தோட்ட நிர்வாகமே பாடசாலையை நிர்வகித்தது. இதனால் தோட்ட நிர்வாகத்திலிருந்து எழுதுவினைஞர் (Clerk) ஒருவரே ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். காலையில் ஆசிரியராக கடமையாற்றும் அதேவேளை மாலையில் தோட்ட அலுவலகத்தில் (Estate Office) தனது கடமையை மேற்கொள்வார். ஆரம்பகாலத்தில் தேயிலைச் செடிகளை பாதுகாக்கவே இவ்வாறான பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டதாக கூறப்படுகின்றது.

இங்கு ஆரம்ப (பாலபோதனி, இலகு போதனி) கல்விக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையை தோட்ட முகாமையாளரே மேற்பார்வை செய்து வந்துள்ளார். வருடத்திற்கு ஒருமுறை பண்டாரவளை வட்டாரக் கல்வி காரியாலயத்திலிருந்து அதிகாரி C.E.O (Circuit Educational Officer) மேற்பார்வை செய்வார். 1977 தொடக்கம் அதிபராக திருமதி.S.நவமணி அவர்கள் பாடசாலையை பொறுப்பேற்றுக் கொண்டார். இவ்வாறு செயற்பட்டு வந்த எமது பாடசாலையை 1980ம் ஆண்டு அரசு பொறுப்பேற்றுக் கொண்டது.

1980.07.24 அன்று அரசு பொறுப்பேற்றதைத் தொடர்ந்து பாடசாலையில் அனைத்து நடவடிக்கைகளையும் திருமதி.சி.நவமணி அம்மையார் பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது அயராத உழைப்பினால் பாடசாலை குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கடமையாற்றிய அதிபர்களும் ஆசிரியர்களும் தொண்டர் ஆசிரியர்களும் மற்றுமன்றி பெற்றோர்கள் அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள் நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பாடசாலை வளர்ச்சியில் பெரும் சக்தியாக திகழ்ந்துள்ளனர்.

இங்கு கடமையாற்றிய அதிபர் திரு.R.S.இராஜேந்திரன் (1992-2002) அவர்களுடைய காலப்பகுதியில் பல்வேறு வளர்ச்சிகளைக் கண்ட எமது பாடசாலை 1-6ம் வகுப்பு வரை காணப்பட்டது. தொடர்ந்து வந்த அதிபர் திரு .T.சரவணபவா (2002-2009) அவர்கள் மாணவர்களின் இடைவிலகலை தடுத்து நிறுத்துவதற்காக வகுப்புக்களை 1-9 வரையாக தரம் உயர்த்தினார்.

அவரது காலப்பகுதியில் பாடசாலை விளையாட்டு, கலை என பல்வேறு வெற்றிகளை கண்டு தனித்துவமான பாடசாலையாக இயங்கி வந்துள்ளது. இவரது காலத்தில் தரம் 5 பரீட்சையில் மாணவர் ஒருவர் (ப.அபிராம்) 140 புள்ளியைப் பெற்று சித்தி பெற்றுள்ளார்.

தொடர்ந்து 2009ம் ஆண்டு புதிய அதிபராக திரு.R.S.முத்துக்குமார் அவர்கள் பாடசாலையை பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது காலப்பகுதியில் பாடசாலை பல்வேறு வெற்றிகளை கண்டுள்ளது.

2009ம் இடம் பெற்ற சமுர்த்தி போட்டிகளில் மாணவர்கள் அகில இலங்கை மட்டத்தில் நடைப்பெற்ற நடனப்போட்டியில் 3ம் இடத்தினை பெற்றுக் கொண்டார்கள். மேலும் நாடகம் வீதி நாடகம் விளையாட்டுப்போட்டி என்பன மூலம் பல்வேறு பரிசுகளை பெற்றுக் கொண்டனர்.

2010,2011 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் விளையாட்டு போட்டிகளின் மூலமும் கோட்ட மட்டம் வலய மட்டம் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் பல்வேறு பரிசுகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

2012ம் ஆண்டு அகில இலங்கை மட்டத்தில் நடைப்பெற்ற 15 வயதின் கீழ் பாடசாலைகளுக்கிடையிலான கபடி போட்டிகளில் மாணவர்கள்(ஆண்இபெண்) பங்கேற்று பல்வேறு திறமைகளை காட்டி உள்ளனர்.

2012ம் ஆண்டு வரை 1-9 வரை நடைப்பெற்ற வகுப்புக்கள் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1-5 வகுப்புக்கள் வரை மட்டுப்படுத்தப்பட்டது. தற்போது 152 மாணவர்களையும் 08 ஆசிரியர்களையும் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குளங்களைக் கட்டிய மன்னர்கள்

- அபயவாவி - பண்டுகாபயன்
- திஸ்ஸவாவி - தேவநம்பிய தீசன்
- மின்னேரியா - மகாசேனன்
- கலாவாவி - தாதுசேனன்
- கவுதுலுவாவி - மகாசேனன்
- பதவி குளம் - 2ம் முகலன்
- ஜயவாவி - பண்டுகாபயன்
- பராகிரம சமுத்திரம் - பராக்கிரமபாகு
- கந்தளாய் குளம் - 2ம் முகலன்
- காமினிவாவி - பண்டுகாபயன்

**பு. யோகேஸ்வரி**
தரம் 5


| | | |
|---|---|---|
| | P. யேகேஸ்வரி (சித்தி) | 154 |
| | Y. தரணியா | 138 |
| | T. அஜித்குமார் | 137 |
| | A. ரிசாந்தி | 134 |
| | M. தனுசிகா | 133 |
| | G. தினேஸ் | 124 |
| | V. துஷ்யந்தி | 122 |
| | C. பிரவீன் | 121 |
| | C. எரோமியா | 119 |
| | A. அபிதுராணி | 117 |
| 2013 | S. கண்ணதாசன் | 121 |
| | D. கிருஷாந் | 114 |
| | M. அசான் | 104 |
| | R. அபிவித்தியானந்தன் | 100 |
| | P.விநோதராஜ் | 75 |
| | P.கிரிசாந்த் | 73 |
| | P.புஸ்பநந்தனி | 99 |
| | J.இந்துஜா | 76 |
| | S.தயாளனி | 80 |
| | V.டிலக்சனி | 90 |
| | T.கிரிசாந்தனி | 71 |

2013ம் வருடம் நடைப்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் பாண்டித்திய மட்டத்தை எட்டிய மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012 வைத்திய முகாம்



2012 வைத்திய முகாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியம் தரும் ஆசனங்கள் ...

இரத்த ஓட்டம் அதிகரிப்பதன் நவீன சிந்தனைகளைக் கொண்ட நவீன தொழிநுட்பங்களை கையாளக் கூடிய இக்கால கட்டத்தில் எமது பண்டைய ஆசனங்களும் முக்கியத்துவம் பெறுகின்றது. யோகாசனம் எனும் போது எமக்கு ஏற்படுகின்ற பல உடல், உள பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைகிறது. அந்த வகையில் எமக்கு ஏற்படுகின்ற பல நோய்களுக்கும் ஓர் ஔடதமாக விளங்குகிறது என்றால் அது மிகையாகாது. பல்வேறு ஆசன வகைகளும், அதன் பயன்பாடுகளும் இருக்கின்றன.ஒவ்வொரு ஆசனமும் ஒவ்வொரு நோய்களை குணப்படுத்தவல்லது. மனமகிழ்ச்சி, உடல் ஆரோக்கியம், அழகு இவற்றை பெற நவீன சாதனங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டாலும் எம்மால் என்றும் எப்பொழும் செய்யக்கூடிய பல வகை ஆசனங்கள் உள்ளன. அந்த வகையில் இங்கு இரு ஆசனங்கள் குறிப்பிட்டு அவற்றை எவ்வாறு செய்வது என்பதைப் பார்ப்போம். கீழ் வரும் ஆசனங்கள் மூலம் எமக்கு கிடைக்கும் பலன்களும் அதன் மூலம் குணமடையும் சில நோய்களும் குறிப்பிடப்படுகின்றன. முதலாவதாக சர்வாங்க ஆசனம் எவ்வாறு செய்வது எனவும், இரண்டாவதாக விபரீதகரணி ஆசனம் எவ்வாறு செய்வது எனவும் பார்க்கலாம்.

சர்வாங்க ஆசனம்

1. சர்வாங்க ஆசனத்தை செய்யக்கூடியவர்கள் அல்லது செய்ய தகுதி உடையோர்கள்.

குறைவான சுரப்புள்ள தைராய்டு சுரப்பியைத் தூண்டி முறையாக சுரக்க செய்ய உதவுகிறது. (Hypothirodism) சைனஸ் நோயுள்ளவர்கள் இதனைச் செய்யலாம். மார்புச்சளி தொண்டை கோளாறுகள் பற் கோளாறுகள் உள்ளவர்களுக்கும் உகந்த ஆசனமாகும். கால்களில் ஓடும் இரத்த ஓட்டத்தை சீர் செய்கிறது. கழுத்துப் பகுதியின் தண்டெழும்பில் உண்டாகும் நரம்பு முறுக்குகளை சீராக்குகிறது. முதுகு, இடுப்பு, தொடை பகுதிகளில் நரம்பு முறுக்குகளை தளர்க்க உதவுகிறது.

இவ்வாசனத்தை செய்யக் கூடாதவர்கள் இரத்தக் கொதிப்பு, இதய நோய், கழுத்துப் பகுதி தண்டெழும்பில் கோளாறு உடையவர்கள் மற்றும் காதுகள், கண்களில் கோளாறுகள் உள்ளவர்கள் இவ்வாசனத்தை செய்வதை தவிர்த்தல் வேண்டும். அதீக இரத்த ஓட்டத்தை வழங்கும் இவ்வாசனம் மேற்படி உடற் கோளாறு உள்ளவர்களின் உடல் நிலை பாதிக்கும். (Liver) கல்லீரல், அதிகப்படியான சுரப்புள்ள தைராய்டு சுரப்பி நோயாளர்களும் (Hyperthyroidism) தண்டு விடப் பாதிப்புள்ளவர்களும் இந்த ஆசனத்தை தவிர்ப்பது சிறந்ததாகும். மேலும் இவ்வாசனத்தை எவ்வாறு செய்வது என்பதை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I குதிங்கால்களைச் சேர்த்தும் பெருவிரல்களை விலக்கியும் வைத்தப்படி நிற்க வேண்டும்.

II. மெதுவாக அமர்ந்து கால்களை நீட்டி நேராக படுத்து கைகள் இரண்டும் உடம்பை ஒட்டிய நிலையில் இருக்க வேண்டும்.

III. முழங்கால்களை மடக்கிய வண்ணம் கால்களை உயர்த்தி தலைகீழ் "I" வடிவில் கால்கள் மடக்கியிருக்க வேண்டும். பின் பெருவிரல்களை மடக்கியும் நீட்டியும் தளர்த்திக் கொள்ள வேண்டும்.

IV. கைகளால் இடுப்பை தாங்கியப்படி உடம்பை மேலே உயர்த்தி தலையும் தோல்களும் முழங்கால்களும் மட்டுமே தரையை தொட்டுக் கொண்டிருக்கும் படி செய்தல் வேண்டும். இப்போது எமது உடம்பு முழுவதும் எமது தோல்களின் மேல் நின்று கொண்டிருக்கும் உடம்பை நிலை நிறுத்துவதற்கு இடுப்பை கைகளால் தாங்கிக் கொண்டிருக்கிறது. முழங்கைகள் இரண்டையும் கூடுமான வரை நெருக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

V. மெதுவாக உடம்பை கீழிறக்கி தளர்த்தல் வேண்டும்.

## 2. விபரிதகரணி

மேற்படி ஆசனத்தை செய்யக்கூடியவர்கள்.
இவ்வாசனமானது இதயத்தை உறுதிப்படுத்துகிறது. நிணநீர் சுரப்பிகள் சுரக்க உதவுகிறது. நுரையீரல் என்புருக்கி நோய் (Pulmonary tuberculosis) அடிநா அழட்சி (Tonsillitis) மார்புச்சளி ஆகிய நோயுள்ளோர் இதனை செய்வதன் மூலம் பயனடையலாம்.

இவ்வாசனத்தை செய்யக்கூடாதவர்கள்

தைரொய்டு மிகை சுரப்பு, இரத்தக்கொதிப்பு இதய நோய் உள்ளவர்களும் தண்டு வடத்தில் எலும்புப் பிசகு உள்ளவர்களும், தண்டு வடத்தில் வளர்ச்சி குறைபாடு உள்ளவர்களும் (Spinal bifida) இவ்வாசனத்தை தவிரப்பது சிறந்தது. இரத்த ஓட்டம் அதிகரிப்பதன் மூலம் சில அசௌகரியங்கள் ஏற்படலாம். எனவே இவர்கள் இவ்வாசனத்தை செய்யாமல் இருக்கலாம். தொடர்ந்து இவ்வாசனத்தை எவ்வாறு செய்வது என்பதை பார்க்கலாம்.

I. குதிங்கால்களை சேர்த்தும் பெரு விரல்களை விளக்கியும், வைத்தப்படி நிற்க வேண்டும். பின் தரையில் நேராக படுக்க வேண்டும்.

II. பின்புறங்கள் (உடம்பு) தரையில் இருக்க முழங்கால்களை மடக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களை உயர்த்தி ஒரு தலைகீழ் "I" வடிவில் அமைத்து பெருவிரல்களை அசைத்தல் வேண்டும்.

III. கைகளால் இடுப்பை தாங்கி முழங்கால்களை தரையில் ஊன்றியபடி உடம்பை உயர்த்தி முழங்கால்கள் இரண்டும் ஒன்றுக்கொன்று எவ்வளவு நெருக்கமாக இருக்க முடியுமோ அவ்வளவு நெருக்கமாக இருக்கட்டும். உடல் எடை முழங்கால்களாலும் தோல்களாலும் சமமாக பகிர்ந்து கொள்ளப்பட்டு இருக்கட்டும். இவ்வாறு இருக்கும் போது புவியீர்ப்பு விசையின் ஈர்ப்பு மையம் நெஞ்சுப் பகுதியில் இருக்கும்.

IV. மேற்படி முழங்கைகளால் தாங்கப்பட்ட உடம்பை மெதுவாக படிப்படியாக தரைக்கு தாழ்த்தி தளர்த்தல் வேண்டும்.

மேற்படி ஆசனங்கள் இலகுவாக செய்யக்கூடியவை எனவே இதனை செய்து பயன் பல பெறுவோம். ஆசனங்கள் மூலம் எண்ணற்ற கலங்கள் புதுபிக்கப்பட்டு, புத்துயிர் பெறுகின்றன. இதனால் எமது உடலும் புத்துணர்ச்சி பெறுகின்றது. எனவே ஆசனங்கள் இவை மட்டுமல்ல எமக்கு தெரிந்த செய்யக்கூடிய பல ஆசனங்கள் இருக்கின்றன அவற்றையும் செய்து பயன் பெறுவோம்.

தொகுப்பு
**இரா. அருந்ததி**
**ஆசிரியை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி வரலாறு

ஊவாவின் ஊவாக்கலை வரலாற்றை
உணர்வோடு – எழுதிட
சீமை சிவத்தின்
மனம் மகிழ்கிறது
உளம் துடிக்கிறது.

ஏடு எடுத்து நானெழுத
எழுத்தாணி கேட்கிறது
எழுத முடியுமா - உன்னால்
உண்மை வரலாற்றை.
எண்ணத்தில் தோன்றியதை
எழுதுகின்றேன் ஏழ்மையாக
எம் முன்னோர்கள்
ஊரை விட்டு, உறவை விட்டு
நிலத்தை விட்டு, நிம்மதி விட்டு
நாட்டை விட்டு நகர்ந்து வந்து

காட்டை அழித்து களனியாக்கி
தோட்டம் இட்டு தேயிலை நாட்டி
துரை வாழ வழியமைத்து
கொடுத்த நாம்
இன்று இம்மண்ணில்
நூற்றாண்டு கடந்து நூல்
படிக்க எண்ணியுள்ளோம்.

எம் முன்னோரை
குனிய வைத்த கூட்டத்தினர்
குதிரை கட்ட உபயோகித்த
உன்னத இடமே
ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம்.
குதிரை கொடடகையாக இருத்த - இடம்
அன்று பாதை இருக்கவில்லை
பஸ் கார் ஓடவில்லை
வாகனம் இருக்கவில்லை
இடவசதிகள் இருக்கவில்லை
துன்பம் இருந்தது
தொலைபேசி இருக்கவில்லை
இன்று அவ்விடத்தில் கல்வி இருக்கிறது
கற்றோர்கள் இருக்கிறார்கள்
கொட்டகையாக இருந்நது
கல்லூரியாக மாறியுள்ளது
ஏழ்மையாக இருந்நது
எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவில்
நிமிர்ந்து நிற்கின்றது.
ஓங்குக புகழ்
ஒளிர்க கல்வி..!

**கவிஞர் மடுல்சீமை சதாசிவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012ம் ஆண்டு தேசிய மட்டம் வரைச் சென்ற கபடி குழு



2012ம் ஆண்டு தேசிய மட்டம் வரைச் சென்ற கபடி குழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாடப் புத்தகங்களை நேர்த்தியாக பேணும் விதங்கள்

- புத்தகங்களுக்கு உறையிட்டு எழுதுதல்.
- புத்தகப்பக்கங்களில் எழுதாது பேணல்.
- புத்தகங்களின் தாள்களை மடிக்கவோ, கிழிக்கவோ கூடாது.
- பாடப்புத்தகங்களை ஒழுங்காக மேசையில் அடுக்கி வைத்தல்.

**ச. தனுஸ்**
தரம் 3

# பிராணி பற்றிய தகவல்கள்



1. **தனிமையில் செல்லும் பிராணிகள்**
   நாய், எலி, பல்லி, ஆமை, நீர்ப்பல்லி, பாம்பு, தும்பி, ஓணாண்
2. **சோடியாக செல்லும் பிராணிகள்**
   மைனா, சிட்டுக்குருவி, மணிப்புறா, குயில், செண்பகம்
3. **கூட்டமாக செல்லும் பிராணிகள்**
   எறும்பு, தேனீ, கிளி, எருமை, நாரை, கறையான், யானை, பன்றி, காகம்
4. **சுத்தமான பிராணிகள்**
   காகம், பூனை
5. **அதிக ஒலியைக் கேட்கும் திறனுடைய பிராணி**
   நாய்
6. குயில் சித்திரை மாதத்தில் மட்டுமே கூவும்.

**R. யுகாசினி**
தரம் 2



# *My Country*

Sri Lanks is my Country. It is a beautiful Island in the Indian Ocean. It is called as the pearl of the Indian Ocean. The capital city of Srilanka is Sri Jayewardenepura kotte. The Mahaweli is the longest river in Sri Lanka. Coconut, Rubber and Tea are the main exports crops of Sri Lanka. I love my country very much.

**P.Yogeswary**
**Grade 5**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்திச்சூடி

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
சீரைத் தேடின் ஏரைத்தேடு.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
தாயில் சிறந்ததொரு கோயிலும் இல்லை.
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை.
முற்பகல் செயின் பிற்பகல் விளையும்.

C. வினோதிகா
தரம் I

## கொன்றை வேந்தன்

அறம் செய விரும்பு
ஆறுவது சினம்.
இயல்வது கரவேல்.
ஈவது விளக்கேல்.
உடையது விளம்பேல்.
ஊக்கமது கைவிடேல்.
எண்ணெழுத்து இகழேல்.
ஏற்பது இகழ்ச்சி.
ஐயமிட்டு உண்.
ஒப்புரவு ஒழுகு.
ஓதுவது ஒழியேல்.
ஔவியம் பேசேல்.

**G. சிபித்சிகா**
தரம் I

## டயறியில் பதிந்த தத்துவங்கள்..!

- பெண்ணுக்கு ஆணவமும், ஆணுக்கு கோபமும் பரம எதிரிகள்.
- ஆணவம் என்ற நெருப்பு இருந்தால் அழிவு என்னும் எண்ணெய் தானாக சுரக்கும்.
- உண்மை அழியாது, கொஞ்சம் உறங்கும்.
- ஒரு துன்பம் தீர்ந்து விட்டதே என மகிழாதே, அடுத்து வரும் துன்பத்திற்கு ஆயத்தமாய் இரு.
- சுமக்க சுமக்கத்தான் பாரம் தெரியும். சிந்திக்க சிந்திக்கத்தான் உண்மை தெரியும்.
- சோதனையைக் கண்டு வாழ்க்கையை வெறுப்பவன் ஏமாளி. இன்பத்தைக் கண்டு சிரிப்பவன் மடையன்.
- சிந்தனை அறிவை பெருக்கும். சோதனை வெற்றியைத் தரும்.
- இலட்சியம் இல்லாதவன் வாழ்க்கை துடுப்பில்லாத தோணியை போன்றது.
- வேகமாய் மலை ஏற நினைப்பவன் சறுக்கி விழுவான்.
- பொய் இனிமையானது. அதன் விளைவு பயங்கரமானது.

**S.ஜோதிலட்சுமி**
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 15 வருடங்களில் புலமைப்பரிசில் பரீட்சைகளில் பாண்டித்திய மட்டத்தை எட்டிய மாணவர்கள் விபரம்

| வருடம் | பெயர்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1998 | R.சரஸ்வதி | 74 |
| 1999 | V.சிவக்குமார் | 70 |
| 2000 | A.பிரபாகரன் | 89 |
| | S.கமலகரன் | 87 |
| 2001 | K.கிருஸ்ணகிளி | 101 |
| | V.சிவசாந்தி | 90 |
| | D.கேதீஸ்வரம் | 76 |
| | S.மெடோனா | 76 |
| 2002 | S.B.கஸ்தூரி | 86 |
| 2003 | S.சஞ்சிகா | 98 |
| | S.சர்மானந்தன் | 95 |
| | S.மனோலசந்தனி | 72 |
| 2004 | K.மங்கலெஸ் | 94 |
| 2005 | P.சுபாசினிவாசு | 112 |
| | M.சதீஸ்வரி | 92 |
| | Y.பிரகாஸ் | 82 |
| | J.தர்மதேவி | 76 |
| | T.பிரவீனா | 72 |
| 2007 | P.அபிராம் | 140 சித்தி |
| | P.பிரேம்குமார் | 132 |
| | T.மேகலா | 117 |
| | S.நிரோசன் | 112 |
| | R.மனோஜ்குமார் | 113 |
| | M.விஜித்ரா | 99 |
| | S.சர்மிளா | 98 |
| | K.விஜயகுமாரி | 94 |
| | R.யரிஸ்மேரி | 92 |
| | L.ஆ.இந்திரகலா | 80 |
| 2009 | R.ஸ்டேன்லி | 122 |
| | S.ரெபேக்கா | 116 |
| | R.ஜெயரஞ்சன் | 88 |

| வருடம் | பெயர்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| 2010 | G.அபிசேக் | 116 |
| | S.சதீஸ்குமார் | 93 |
| | J.யதர்சனா | 89 |
| | S.ஜெனிட்டாமேரி | 80 |
| | V.கோபிநாத் | 77 |
| | M.நவஜீவன் | 73 |
| 2011 | P.யசிதரன் | 146 |
| | N.தனுசன் | 130 |
| | D.யதுர்சன் | 116 |
| | S.ரேவதி | 116 |
| | T.பிரசித்குமார் | 100 |
| | C.கௌசல்யா | 84 |
| | M.விஜயசாந்தி | 77 |
| | S.கேதீஸ்வரன் | 77 |
| | V.அஜித்குமார் | 72 |
| 2012 | J.தர்சனா | 104 |
| | M.நுசாந்தி | 101 |
| | B.ரிஸ்வான் | 97 |
| | S.யதுர்சன் | 95 |
| | S.மோகனேஸ்வரி | 93 |
| | T.ஜனகன் | 92 |
| | K.சிவகீர்த்தனா | 78 |
| | S.இவாஞ்லிகிரேசி | 78 |
| | C.யோகப்பிரியா | 74 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2013ம் வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்ற மாணவி பு.யோகேஸ்வரி ஆசிரியை திருமதி.ராஜவதனியுடன்



2013ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 100க்கு மேல் புள்ளிகளை பெற்ற மாணவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் வீடு {சிறுகதை}

அந்தி வெயில் சிந்து பாடிக் கொண்டிருந்தது. சூரியன் மேற்கே மறைவதை சந்திரன் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். தூரத்தே கோயில் மணியோசை கேட்டுக் கொண்டிருந்தது.வீட்டின் ஓரத்தே அமர்ந்திருந்த வள்ளி எதையோ சிந்தித்தபடி இருந்தாள். அவள் முகத்தில் அடிக்கடி மாற்றம் பெற்ற உணர்வுகள். அவள் அகத்தின் எண்ணங்கள் முகத்தில் தெரிந்தாலும் அவை மகிழ்வா? கவலையா? ஏமாற்றமா? சரியாக ஊகிக்க முடியவில்லை.

திடீரென இடத்திலிருந்து எழுந்தவள், சாமி படத்தின் முன்னால் போய் "கடவுளே! ஏம் புள்ளைக்கு இந்த வேலை சரி வரனும். நீதான் நல்லபடியா பாத்துக்கனும். நாளைக்கு போற இடத்துல எல்லாம் சரி வரனும்;" வேண்டி முடித்தவள் தன் மகளை நோக்கி "அம்மா வதனி பணிய லயத்துல தெய்வான அக்கா கிட்ட காசு கேட்டேன் போய் வாங்கிகிட்டு வந்திடுறேன் நீ கவனமா இரும்மா" என்று கூறியவாறு மெதுவாக நடந்து வெளியே வந்தாள்.

வள்ளி தேயிலை மண்ணிலே பிறந்தவள். தேயிலை பறித்தே தன் வாழ்வை நடத்தியவள். பருவத்தோடு போராடி தோற்றுப் போனவள். காதலென்ற வலையில் வீழ்ந்து தன் கற்பை இழந்து வயிற்றில் குழந்தையோடு தனித்து விடப்பட்டவள்.வெறுமையான வாழ்வோடு போராடி நோயையும் தன் உறவாக்கிக் கொண்டு தான் பெற்ற மகளுக்காய் வாழ்ந்து வருபவள். மகளை கரை சேர்க்க படிக்க வைத்தாள்.தன்னால் இயன்ற வரை தன்னை அர்ப்பணித்தாள். அதன் பயன் வதனியும் நன்றாகப் படித்தாள். உயர்தரம் வரை முடித்தாள். இன்று கல்லூரிக்கு செல்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தாள். அத்தனை நாள் ஊரார் பார்வைக்கு கேலிப் பொருளான வள்ளி இனி தானும் ஒரு மதிக்கத் தக்கவளாக தலை நிமிர்ந்து நடக்கப் போவதை எண்ணி மகிழ்ந்தாள். அவள் உள்ளம் பூரிப்பால் நிறைந்தது. அந்த நிறைவில் மகளுக்காய் பணம் தேடச் சென்றாள்.

சற்று இருட்டி விட்டிருந்தது. போன காரியம் கிடைத்து விட்ட மகிழ்வோடு வீட்டினுள்ளே நுழைந்தாள் வள்ளி. "வதனி சல்லி கெடச்சிருச்சி. நாளைக்கு காலையில மொத பஸ்ஸிக்கு போவம். நீ போய் தூங்கு. நான் காலையில். வெள்ளனா எழும்பி சாப்பாடு செய்றேன்". என்றாள்.

பொழுது புலர்ந்தது. அதிகாலையிலே எழும்பி பயணத்திற்கு தேவையான ஆயத்தங்களை செய்தாள். இருவரும் முதல் பஸ்ஸில பறப்பட்டனர். ஒருவாறு கல்லூரியை வந்தடைந்தனர். வள்ளி வெளியிலே நிற்க வதனி உள்ளே சென்றாள். வெளியே நின்ற வள்ளி வேண்டாத தெய்வம் இல்லை. பதைபதைப்புடன் நின்று கொண்டிருந்தாள். "கடவுளே எல்லாம் நல்லபடியா நடக்கனும். உன்ன நம்பித்தான் இருக்கேன். அவள் கடவுளிடம் மன்றாடினாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனி தூரத்தில் வருவதைக் கண்ட வள்ளி அவளருகே சென்றாள். "வதனி என்னம்மா ஆச்சி? சரின்னு சொல்லிட்டாங்களா? ஒனக்கு வேல கிடைக்குமா?" என ஆவலோடு கேட்டாள். வதனியின் கண்களில் கண்ணீர் முட்டியது. "இல்லம்மா. நீ ஏம்மா என்ன பெத்த? சின்னதுலே கொன்னுருக்கலாம். அப்பன் பேர் தெரியாதவனு ஊர் சொன்னிச்சி. நீ செஞ்ச தப்புக்கு நான் தண்டனைய அனுபவிக்கனுமா? நா என்னம்மா பாவம் செஞ்சேன்? இல்லனா நீ எஸ்டேட்டுல வேல செஞ்சி தொலச்சிருக்கலாம். இப்ப பாரு எஸ்டேட் லெட்டர் இல்லனு என்ன எடுக்க மாட்டேனு சொல்லிட்டாங்க.

மகளின் வார்த்தைகளைக் கேட்ட வள்ளி இடி விழுந்ததைப் போலானாள். அவளுடைய கனவுகள் பொடியாகின. மகளின் வார்த்தைகள் அவளின் காதுக்குள் எதிரொலித்தன. அவளின் உள்ளம் கேட்டது. " தப்பு செய்தது நான். ஆம் நான்தான். பெற்ற மகளை பார்க்க முடியாது தலை குனிந்தாள். அவளின் கண்களில் நீர் முட்டியது. கண்ணீரோடே அங்கிருந்த முதல்வரிடம் ஓடினாள். " ஐயா! என் மகள் நல்லா படிப்பா. இங்க அவள சேர்த்துக்கங்க." மன்றாடினாள். பயனில்லை. நீருக்குள் மீனழுதால் யாருக்கு கேட்க போகிறது. அந்த தாயின் கண்ணீரைத் துடைக்க இங்கு யாருமில்லை. உள்ளக் களிப்பில் வந்தவள் நொறுங்குண்ட இதயத்தோடே புறப்பட்டாள் வந்த வழியே.

R. சிவரஞ்சனி
ஆசிரியை

# Water



**Water is essential for us. We get water from Rain,Wells,Taps and Lakes. Farmers use water for cultivation. Mothers use water for cooking and washing clothes.**

V.Thusanthi
Grade 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் உள்ள தொழிற்சாலைகள்

| தொழிற்சாலை | அமைந்துள்ள இடம் | தொழிற்சாலை | அமைந்துள்ள இடம் |
|---|---|---|---|
| கடதாசி | வாழைச்சேனை, எம்பிலிப்பிடிய | கோதுமை மா | திருகொணமலை |
| சீமெந்து | காங்கேசன்துறை, புதத்ளம், காலி | உருக்கு | ஒருவெல |
| டயர், டியுப் | களணி | இரும்பு | யக்கல |
| ஓட்டுப்பலகை | ஜின்தோட்டை | சீனி | கந்தளாய் ஹிங்குறான |
| கண்ணாடி | நாத்தாண்டியா | கனிப்பொருள் சுத்திகரிப்பு | புல்மோட்டை |
| பால்மா | அம்பேவலை | உப்பளம் | ஆனையிறவு புத்தளம் அம்பாந்தோட்டை |
| கட்டிப்பால் | பொலநறுவை | புடவை | பூகொடை, வியாங்கொடை |
| பீங்கான் | பிளியந்தல | தோல் பதனிடுதல் | மட்டக்குளிய |

**அழகர்சாமி அபிதராணி**
தரம் 5

# விடுகதைகள்


1) காலையில் வருவான் மாலையில் மறைவான் அவன் யார்? சூரியன்
2) முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை. அது என்ன ? நாக்கு
3) பல் துலக்காதவன் உடம்பெல்லாம் பற்கள். அவன் யார்? சீப்பு
4) உரிக்க உரிக்க தோல். அது என்ன? வெங்காயம்
5) வெள்ளை மனிதனுக்கு கறுப்பு தொப்பி. அது என்ன? தீக்குச்சி
6) நாலு கால்கள் உண்டு நடக்கத் தெரியாது. நான் யார்? நாற்காலி
7) உயர எறிந்தால் தரையில் விழுவான் தரையில் எறிந்தால் உயர எழுவான் அவன் யார்? பந்து
8) உள்ளே இருந்தால் ஓடித் திரிவான் வெளியே வந்தால் விரைவில் மடிவான் அவன் யார்? மீன்

**G.ஜொனர்த்தன்**
தரம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்தரேலியா குழு வருகை



அவுஸ்தரேலியா குழு வருகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றமும் உலகம் எதிர் நோக்கும் பிரச்சினையும்



காலநிலை மாற்றம் என்பது சூழலின் ஒரு அடிப்படை பண்பாகும். புவியின் பனிக்கட்டியாற்றுக் காலத்திலிருந்து இன்றைய நவீன தொலை தொடர்பு யுகம் வரை இது நிகழ்ந்து வருகிறது. அவ்வாறான புவியில் வரலாற்று காலநிலை மாற்றங்கள் இயற்கையின் காரணிகளால் ஏற்பட்டன. இன்று மனிதனின் நடவடிக்கைகளும் காலநிலை மாற்றங்களுக்கு காரணமாகி விட்டன. புவியில் காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதற்கு பின்வரும் உதாரணங்களாக குறிப்பிடலாம்.

- புவிகோள வெப்பநிலை அதிகரித்து வருதல்
- அதிகரித்து வரும் புயல்கள்
- சமுத்திர நீரோட்ட மாற்றங்கள்
- சுருங்கும் அந்தாட்டிக் பனிப்போர்வை

காலநிலை மாற்றத்தினால் உலகம் பல்வேறு விதமான தாக்கங்களை சந்தித்துக் கொண்டு தான் இருக்கின்றது. சூழல் சமநிலை பேணலுக்கும், உயிரின ஆரோக்கியத்திற்கும், உலக பொருளாதார அபிவிருத்திக்கும் பாரிய தடையாக இருப்பது காலநிலை சீர்கேடுதான் என்பதை பாமர மக்கள் முதல் சூழல் ஆய்வாளர்கள் வரை அறிந்த விடயமாகும்.

பாரிய தொழிநுட்ப முன்னேற்றங்களால் உலகம் ஒரு புரம் வளச்சியடைய மறுபுரம் பாரிய சவால்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. இதற்கான பிரதான காரணம் வளி மண்டளத்திலுள்ள $Co_2$, மெதேன் வாயு CFC (குளோரோ புளோரோ காபன்) போன்ற வாயுக்களின் அளவு தொடர்ந்து அதிகரித்து செல்கின்றமையே ஆகும். இதனால் புவி வெப்பமடைதல் தீவிரமடைந்து கொண்டு செல்கின்றது.

இம்மாற்றத்தினால் உலகம் பல்வேறு சூழல் பிரச்சினையினை எதிர்நோக்கியுள்ளது. புவியின் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக கடல் மட்டம் உயரும், பாலைவனமாதல் அதிகரிக்கும், இயற்கை அனர்த்தங்கள் அதிகரிப்பு, மிருக இனங்கள் அழிதல், மனிதனுக்கான நோய்கள் அதிகரிப்பு போன்றன இடம் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலை மாற்றம் என்பது சூழலின் ஒரு அடிப்படை பண்பாகும். புவியின் பனிக்கட்டியாற்றுக் காலத்திலிருந்து இன்றைய நவீன தொலை தொடர்பு யுகம் வரை இது நிகழ்ந்து வருகிறது. அவ்வாறான புவியில் வரலாற்று காலநிலை மாற்றங்கள் இயற்கையின் காரணிகளால் ஏற்பட்டன. இன்று மனிதனின் நடவடிக்கைகளும் காலநிலை மாற்றங்களுக்கு காரணமாகி விட்டன. புவியில் காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதற்கு பின்வரும் உதாரணங்களாக குறிப்பிடலாம்.

- புவிகோள வெப்பநிலை அதிகரித்து வருதல்
- அதிகரித்து வரும் புயல்கள்
- சமுத்திர நீரோட்ட மாற்றங்கள்
- சுருங்கும் அந்தாட்டிக் பனிப்போர்வை

காலநிலை மாற்றத்தினால் உலகம் பல்வேறு விதமான தாக்கங்களை சந்தித்துக் கொண்டு தான் இருக்கின்றது. சூழல் சமநிலை பேணலுக்கும், உயிரின ஆரோக்கியத்திற்கும், உலக பொருளாதார அபிவிருத்திக்கும் பாரிய தடையாக இருப்பது காலநிலை சீர்கேடுதான் என்பதை பாமர மக்கள் முதல் சூழல் ஆய்வாளர்கள் வரை அறிந்த விடயமாகும்.

பாரிய தொழிநுட்ப முன்னேற்றங்களால் உலகம் ஒரு புரம் வளச்சியடைய மறுபுரம் பாரிய சவால்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. இதற்கான பிரதான காரணம் வளி மண்டளத்திலுள்ள co2, மெதேன் வாயு CFC (குளோரோ புளோரோ காபன்) போன்ற வாயுக்களின் அளவு தொடர்ந்து அதிகரித்து செல்கின்றமையே ஆகும். இதனால் புவி வெப்பமடைதல் தீவிரமடைந்து கொண்டு செல்கின்றது.

இம்மாற்றத்தினால் உலகம் பல்வேறு சூழல் பிரச்சினையினை எதிர்நோக்கியுள்ளது. புவியின் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக கடல் மட்டம் உயரும், பாலைவனமாதல் அதிகரிக்கும், இயற்கை அனர்த்தங்கள் அதிகரிப்பு, மிருக இனங்கள் அழிதல், மனிதனுக்கான நோய்கள் அதிகரிப்பு போன்றன இடம் பெறும்.

காலநிலை மாற்றத்துக்கு பிரதான காரணமாக ஓசோன் படை சிதைவு (பச்சை வீட்டு விளைவு) ஓசோன் படையானது பொலித்தீன் போன்ற மெல்லியதாக காணப்படுகின்றது. புவியில் வெளியேற்றப்படுகின்ற அணுகுண்டு பரிசோதனை, நச்சுப் பொருட்கள் பாவனை, வாகன புகை, கால் நாடைகளின கழிவுகள் போன்ற தூசு துணிக்கைகள் ஓசோன் படையில் படையாக படிகின்றன. இவ்வாறு தொடர்வதன் மூலம் படை உருவான இடத்தில் துவாரம் ஏற்படும் அந்த வகையில் முதன் முதலாக 1970ம் ஆண்டு அந்தாட்டிக்கா கண்ட மேற்பரப்பில் துவாரம் ஏற்பட்டுள்ளதாக கண்டுப்பிடிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவி வெளியேற்றப்படுகின்ற வெப்பமானது தொடர்ந்தும் வளிமண்டலத்திலேயே தேக்கி வைக்கப்படுகிறது. சூரியனில் இருந்து வெளியேற்றப்படுகின்ற வெப்பமானது தொடர்ந்து புவியின் மேற்பரப்பிலேயே தங்கியுள்ளதால் வழமையை விட வெப்பம் அதிகரிக்கின்றது. இதனால் புவி வெப்பமடைதல் அதிகரிக்கின்றது. இதனால் பனிக்கட்டி உருகுகின்றது. புனிகடடி உருகுவதன் காரணமாக சிறிய தீவுகள் நீரில் மூழ்கும் நிலை உருவாகிறது. மேலும் சுனாமி, வெள்ளப்பெருக்கு, இயற்கை அனர்த்தங்களால் உயிரிழப்புகள் மண்சரிவு என பல்வேறு பட்ட பிரச்சினைகள் காலநிலை மாற்றத்தினால் ஏற்படுகிறது.

ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டு நச்சுக் கதிர்கள் பூமிக்கு வந்தடைவதினால் மேலும் சில பாதகங்களை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக:- தோல் புற்று நோய், கண்பாதிப்பு, சுவாசம் தொடர்பான நோய், தாவரங்களில் ஒளி தொகுப்பு பாதிப்படைதல் என மறுபுரம் தீமைகளை ஏற்படுத்துகின்றது.

மேலும் காலநிலை மாற்றத்துக்கு அடிப்படை காரணங்களாக காடழித்தல், சதுப்பு நிலங்களில், வயல் வெளிகளில் கால்நடைகளின் கழிவுகளில் வெளியேற்றப்படுகின்ற மெதேன் வாயு, யுத்த காலங்களில் வெளியேற்றப்பட்ட அணுகுண்டுகளில் புகை வெளியேற்றம், கனிய வள அகழ்வு, கைத்தொழிலாக்கம், சனத்தொகை அதிகரிப்பு போன்ற வற்றை உலக நாடுகள் முயன்ற அளவில் தவிர்க்கின்ற போதும் சனத்தொகை அதிகரிப்பினால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

காலநிலை மாற்றத்திற்கான காரணத்தை இனங்கண்ட ஆய்வாளர்கள் பல்வேறு நாடுகளில், பல்வேறு காலப்பகுதியில் உலக நாடுகள் ஒன்றுக் கூடி முடிவுகளை நடத்தியது, அந்த வகையில் ஒன்றுக் கூடிய மாநாடுகள் பின்வருமாரு,

- *1985-* வியன்னா மாநாடு
- *1987-* மொன்றியல் கூட்டமைப்பு
- *1997-* கியோட்டோ உடன்படிக்கை
- *1992-* றியோ ஒப்பந்தம்
  றம்ஸா ஒப்பந்தம்
  *35*வது மாநாடு- இந்தியாவில்

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி மாநாடு (வருடா வருடம்)
*1977-* ஐ.நா நீர் மாநாடு (ஆர்ஜென்டீனாவில்)

எனப் பல்வேறு மாநாடுகள் ஒன்றுக்கூடி எடுக்கப்படுகின்ற முடிவுகளை நடைமுறைப் படுத்துவதில் வெற்றி பெறாமைக்கான மிக முக்கிய காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகையேயாகும். ஒவ்வொரு வருடமும் காபனீரொட்சைட்டு வாயுவை 20மூ மாக குறைப்பதாக 35வது மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. கடந்த 100 ஆண்டுகளில் உலக வெப்பமானது 1பாகை செல்சியசாக அதிகரித்துள்ள போதும் 21ம் நூற்றாண்டில் புவியின் வெப்பநிலை 6 பாகை செல்சியசாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் உலக நாடுகளில் ஆபிரிக்க கண்டமானது வறுமை மிகு நாடாகவும் பாலைவனத்தின் பரப்பு அதிகரித்து செல்வதும் பாரிய பிரச்சினையாக இன்று உலகம் எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றது.

எனவே காலநிலை மாற்றமானது பௌதீக காரணிகளாலும் அதிகப்படியான மனித நடவடிக்கையினாலுமே ஏற்படுகிறது. தற்போதைய வளத்தை ஓரளவு பயன் படுத்துவதன் மூலம் இனிவருகின்ற சந்ததியினருக்கு சிறந்த சூழலை கையளிப்பதோடு காலநிலை மாற்றத்தினை முற்றாக தடை செய்ய முடியாத போதும் ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

தொகுப்பு
செல்வி. **செ. நாகேஸ்வரி** (ஆசிரியை)
பது/ஊவாக்கலை த.வி




## சிரி மனமே குட்டிக் கதை

ஒரு ஊரில் ஒரு பாட்டி இருந்தார். அவர் சந்தைக்கு சென்றார். இரண்டு தக்காளிப்பழங்களை வாங்கிக் கொண்டு வந்தார். ஒரு பழத்தை கறிசமைத்தார். மற்றைய பழம் சொன்னது பாட்டி 'நான் பாடசாலைக்கு சென்று படித்து வெற்றிப் பெற்று வருகின்றேன்' என்று சொன்னது. பாட்டி சரி என்று சொன்னார். பழம் கல்வி கற்க பாடசாலைக்கு சென்றது. வெற்றிப் பெற்று வந்ததை கூற, பாட்டி ஓடிச் சென்று பழத்தை கட்டிப்பிடித்தார் பழம் நசிங்கி விட்டது.

**ச. ஜனுஸ்**
தரம் 3

## மொழிகளும் அதன் எழுத்துக்களும்



| மொழி | எழுத்துக்கள் |
|---|---|
| தமிழ் மொழி | 247 |
| இத்தாலிய மொழி | 20 |
| இலத்தீன் மொழி | 22 |
| கிரேக்க மொழி | 24 |
| ஆங்கில மொழி | 26 |
| ஜெர்மனிய மொழி | 26 |
| துருக்கி மொழி | 26 |
| பிரான்ஸிய மொழி | 16 |
| ஸ்பானிய மொழி | 27 |
| அரபு மொழி | 28 |
| பாரசீக மொழி | 31 |
| சீன மொழி | 214 |

T.**கிசாந்த்ன்**
தரம் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம்
## எமது அதிபர்கள்

| இல | பெயர் | இருந்து | வரை |
|---|---|---|---|
| 01 | திரு.அங்கமுத்து அவர்கள் | 1938 | 1962 |
| 02 | திரு.சத்தியநாதன் | 1963 | 1969 |
| 03 | திரு.லிங்கேஸ்வரநாதன் | 1969 | 1971 |
| 04 | திரு.மனோகரன் | 1972 | 1977 |
| 05 | திருமதி.S.நவமணி | 1977.07.15 | 1992.08.15 |
| 06 | திரு.R.S.இராஜேந்திரன் | 1992.09.08 | 2002.01.10 |
| 07 | திரு.T.சரவணபாவா | 2002.02.07 | 2009.01.20 |
| 08 | திரு.R.S.முத்துக்குமார் | 2009.01.21 | இன்று வரை |
| | | | |

## தற்போதைய எமது ஆசிரியர்கள்

| இல | ஆசிரியர் பெயர் | ஆசிரியர் சேவை | நியமன வகை |
|---|---|---|---|
| 1 | திரு.M.ஸ்ரீகோணேஸ் | SLTS - 3I | ஆரம்பக் கல்வி |
| 2 | திரு.S.விக்னேஸ்வரன் | ஆசிரியர் உதவியாளர் | ஆங்கிலம் |
| 3 | திரு.M.பிரேம்குமார் | SLTS - 3II | சமூகக் கல்வி |
| 4 | திருமதி.T.ராஜவதனி | SLTS - 3I | ஆரம்பக் கல்வி |
| 5 | திருமதி.I.கோகிவாணி | SLTS - 3II | ஆரம்பக் கல்வி |
| 6 | திருமதி.R.அருந்ததி | SLTS - 3I | ஆங்கிலம் |
| 7 | செல்வி.S.ஜோதிலட்சுமி | SLTS - 2I | ஆரம்பக் கல்வி |
| 8 | செல்வி.S.நாகேஸ்வரி | SLTS - 3I | சமூகக் கல்வி |
| 9 | செல்வி.R.சிவரஞ்சனி | SLTS - 3I | ஆரம்பக் கல்வி |
| 10 | செல்வி.D.M.துலிக்கா | ஆசிரியர் உதவியாளர் | சிங்களம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனிசெப் குழு வருகை



யுனிசெப் குழு வருகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பது/ஊவாக்கலை தமிழ் வித்தியாலயம்
## கடமையாற்றிய எமது ஆசிரியர்கள்

திரு. R.இரவிச்சந்திரன்
திரு.M.A.ஹாரிப்
திரு.A.L.K.மொஹமட்
செல்வி.ரதிகிருஸ்ணா சோமசுந்தரம்
திரு.திலகேந்திரராஜா
திரு.M.விஸ்வநாதன்
திருமதி.S.சரோஜா
திருமதி.S.இந்திரா
திரு.S.சிவஞானம்
செல்வி.S.சித்திரலேகா
திரு.K.ஜெயபிரகாஸ்
திரு.G.ஜெயாநந்தன்
செல்வி.N.அனுசா
திரு.R.கணேசமூர்த்தி
திருமதி.L.கல்யாணி
திருமதி.M.சத்தியபாமா
திரு.A.பத்மநாதன்
திரு.R.மோகனதாஸ்
திரு.D.சிவக்குமார்
செல்வி.S.விமலாதர்சனி
செல்வி.R.கவிதா

# பழமொழிகள்

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.
பூனைக்கு கொண்டாட்டம் எலிக்கு திண்டாட்டம்.
ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது.
எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லாக்கு.
உண்மைச் சொல்லிக் கெட்டார் இல்லை.
இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
ஆச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது..
காகம் திட்டி மாடு சாகாது.

M.டிஷுக்சிப்பிரயா
தரம் 4

# கிளி



கிளியே கிளியே பறந்து வா
கீ கீ கீ என பறந்து வா
பஞ்ச வர்ண கிளியே பறந்து வா
சின்னக் கிளியே பறந்து வா
சின்னக் கிளியே பறந்து வா
சிறகடித்து நீ பறந்து வா
பறந்து கிடக்கும் நெல் மணியை
பொறுக்கி எடுத்து பறந்து வா
பசி தீர்ந்த பச்சைக் கிளியே
பாசமாய் பழகிட என்னோடு வா
பகைமையொழிய என்னோடு
பாரினில் உரைப்போம் வா

**S. வீதுர்சிகா**
**தரம் 1**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எழுத்துக்களின் தனித்துவம்

உலகில் பயன்பாட்டிலுள்ள மொழிகளில் தமிழ் மொழியானது தனித்துவமான மொழியாகக் காணப்படுகின்றது. பல்வேறு வகையான தனித்துவங்களையுடைய தமிழ் மொழியின் ஒரு பகுதியான தமிழ் எழுத்துக்களின் தனித்துவத்தை சிந்திக்கின்ற போது பல வியக்கத்தக்க விடயங்களை வெளிக்கொணரப்படுகின்றன. அவற்றின் சிலவற்றை பற்றி இக்கட்டுரை பேசமுயல்கின்றது.

தமிழ் எழுத்துக்களுக்கு தமிழ் நெடுங்கணக்கு என தந்தை பெரியார் பெயரிட்டுள்ளார். நீண்ட காலம் நீண்டு நிலைத்து நிற்க கூடியது. என்பதே இதன் கருத்தாகும்.

தமிழில் வழங்கப்படுகின்ற வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூவகை எழுத்துக்களையும் இணைப்பததாக தமிழ் என்ற பெயர் சிறப்பாக அமையப் பெற்றுள்ளது.தமிழ் என்பதில் த-வல்லினம் மி-மெல்லினம் ழ்-இடையினம் ஆக அமைகிறது.

தமிழ் மொழியில் சிறப்பெழுத்தாக ழகரம் காணப்படுகின்றது. தமிழ் என்பதனை தமிழ் என பகுக்கும் போது தம்மிடம் "ழ்" இருக்கிறது என பொருள்படுகின்றது. தமிழுக்கு முத்தமிழ் என்ற பெயரும் உண்டு. இதில் இயல் எண்ணத்தை வளர்க்கின்றது. இசை உள்ளத்தை வளர்க்கின்றது. நாடகம் மக்களை வழிப்படுத்துகின்றது. உள்ளமும் எணணமும் சரியானபோது சமூகம் சீர் பெறுகிறது என்பதனை இது காட்டுகிறது.

தமிழ் எழுத்துக்கள் ஆனவை அதன் எளிமைத் தன்மையால் தனித்துவம் பெறுகிறது.உயிர் எழுத்துக்கள் அனைத்தும் வலமிருந்து இடதுபுறம் நோக்கி எழுதப்படுகின்றன. இதன் காரணமாக தமிழ் எழுத்துக்கள் எழுதுவதற்கு எளிமையாக இருக்கின்றன.

தமிழ் எழுத்துக்கின் உச்சரிப்பு முறைகள் கூட எளிமையானவை. தமிழ் எழுத்துக்களில் உச்சரிப்பு முறைகளில் தொண்டைக்கு கீழ் பயன்படுவதேயில்லை. உயிர் எழுத்துக்களை உச்சரிப்பதற்கு உதடுகள் மட்டும் போதுமானது. எனவேதான் தண்ணீர் கூட அருந்தாமல் பல மணிநேரம் பேச முடிகிறது.

தமிழ் எழுத்துக்கள் ஏனைய மொழிகளில் கூடுதலாக கலந்துள்ளன. இம்மொழியில் பிறமொழிகள் கலப்புற்றபோதிலும் அவற்றால் நிலைக்கொள்ள முடியவில்லை. என்பதன் மூலம் அதன் தனித்துவத்தை உணர முடிகிறது. தமிழில் உயிரெழுத்துக்கள் அனைத்தும் "சுழியை" அடிப்படையாக கொண்டுள்ளன. எனவே சுழியை கற்றுக் கொண்டாலே தமிழை எழுதிவிடலாம் என்பதும் ஒரு தனித்துவம்.

தமிழ் மொழிக்கே உரிய விசேட ஒலியமைப்பைக் கொண்டது ழகரமாகும். தமிழரின் இசைக் கண்டு பிடிப்புக்கருவிகளின் பெயர்களில் "ழ" தெளிவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாசிக்கின்றது. அதாவது தோற்கருவி "முழவு" எனவும் துளைக்கருவிக்கு "குழல்" எனவும் நரம்புக் கருவியாக "யாழ்" எனவும் அமைந்து இருப்பதை அவதானிக்கும்போது தனித்துவம் தெரிகின்றது.

தமிழரின் சொல் அமைப்புகளும் தனித்துவமானவை 3-4 எழுத்துக்களை கொண்ட சொற்களே மிக அதிகம். 8(எட்டு) எழுத்துக்களுக்கு மேற்படாத வகையில் தமிழ் சொற்கள் அமைப்புப் பெற்றுள்ளமையும் ஆச்சரியமான ஒரு விடயமாகும்.

தமிழரின் பண்பாட்டினை மையமாக வைத்து எழுத்துக்கள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பது முக்கிய விடயமாகும். தமிழரின் போர்ப் படையில் வன்மையானவர்களை அடுத்து மென்மையானவர்களும், மென்மையானவர்களை அடுத்து வன்மையானவர்களும், இடைப்பட்டவர்கள் அதே வரிசையில் தனியாகவும் அவர்களை தொடர்ந்து வன்மையானவர்களும் மென்மையானவர்களும் இருத்தப்பட்டார்கள். இதே அமைப்பு முறைதான் மெய்யெழுத்துக்களின் வரிசைப்படுத்தலிலும் காணப்படுகின்றது. வல்லினம்(5) ஐந்தும் அதற்கு இனமான மெல்லினம்(5) ஐந்தும் இணையாக வைக்கப்பட்டு இடையினம் தனியாகவும் ஈற்றில் ஒரு வல்லினமும் அதற்கு இணையாக வைக்கப்பட்டுள்ளதை நோக்குங்கள்.

தமிழ் எழுத்துக்களின் அமைப்பு முறையின் ஊடாக தமிழரின் மெய்யியல் வெளிப்படுத்தப்படுகிறது. கண்ணால் பார்க்க முடியாததும் ஆனால் உணரப்படக் கூடியதுமான ஆன்மாவானது பல்வேறு வடிவங்களின் உடம்பைப் பெறுகின்றது. என்ற தனித்துவம் உயிர் மெய் எழுத்துக்களின் உருவாக்கத்தில் காணப்படுகின்றது. உயிர் எழுத்துக்கின் உருவ அமைப்பு உயிர் மெய் எழுத்துக்களில் காணப்படாமைக்கு இதுவே காரணம்.

உயிர் மெய் எழுத்துக்களின் உருவாக்கத்தின் போது மெய் எழுத்துக்களுடன் உயிர் எழுத்துக்கள் சேர்ந்த போதும் அவை மெய் உயிர் என அழைக்கப்படாது. "உயிர்மெய்" என அழைக்கப்பட்டமைக்கு காரணம் தமிழர் மெய்யியலில் உயிரே முதன்மையானது என்பதனால் ஆகும்.

உயிர் எழுத்துக்களின் வரிசையமைப்பிலும் உயர்வான தத்துவம் காணப்படுகிறது. உயிரானது பரம்பொருளைச் சென்றடைவது அதன் இலட்சியமாகும். உயிர் எழுத்துக்களின் அகரமானது ஆண்மாவைக் குறிக்கின்றது. உயிரானது ஆசையைப் பற்றக் கூடியது. என்பதனால் அதனை அடுத்து ஆகாரம் வைக்கப்பட்டுள்ளது. உயிரானது ஆசையைப்பற்றுவதனால் இன்பத்தையும் அடைகின்றது. ஆன்மாக்களிடம் எதனால் ஏன்? எனும் வினாக்களையே எகர ஏகாரங்கள் குறிக்கின்றன. ஐகாரமானது அகர இகரங்களின் சேர்க்கையாகும். அதாவது உயிரானது இன்பத்தையே நாடி நிற்கின்றது. என்பது அதன் அர்த்தமாகும். உகர ஊகாரங்கள் உயிர் அனுபவிக்கும் துன்பத்தைக் குறிக்கின்றது. ஒகர ஓகாரங்கள் இதுவோ, அதுவோ என ஆன்மாக்களுக்கு ஏற்படும் ஐயங்களைக் குறிக்கின்றது. ஔகாரமானது அகர உகரத்தின் சேர்க்கை ஆகும். இது ஆன்மாக்களுடன் இணையும் துன்பத்தை குறிக்கிறது. எனவே இத்துன்பங்கிளிலிருந்து விடுபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்கள் பரம்பொருளை சென்றடைவது அவசியமாகும். பரம்பொருளையே ஆயுத எழுத்து குறித்து நிற்கின்றது, தமிழ் நெடுங்கணக்கு அரிச்சுவடி என பெயர் வழங்கப்பட்டமைக்கும் இதுவே காரணமாக இருக்கலாம். அரி என்பது ஸ்ரீமத் நாராயணையும் சுவடு என்பது பாதத்தையும் குறிப்பதால் மேல்வரும் கருத்துக்கள் மேலும் வலுப் பெறுகின்றன.

ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதே வாழ்க்கையாகும். என்பதனை உணர்த்தும் வகையிலையே மெய் எழுத்து வரிசைப்படுத்தலில் வல்லினமும் மெல்லினமும் அடுத்தடுத்து வகைப்பட்டன. வல்லினம் ஆண்களையும் மெல்லினம் பெண்களையும் குறிப்பனவாகும். அதனை விளக்கும் முகமாக குடும்ப அங்கத்தவர்களில் அம்மா அப்பா ஆகியவர்கள் முதனிலை படுத்தப்படுவது தமிழ் மரபாகும். இவர்களில் தங்களது பிள்ளைகளை வளர்க்கும்போது அப்பா இருமடங்கு கண்டிப்பாகவும் அம்மா இரு மடங்கு மென்மையானவராகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தை அப்பா என்ற எழுத்தில் உள்ள வல்லினமும் அம்மா என்ற எழுத்துக்களில் உள்ள மெல்லினமும் உணர்த்தி இருப்பதை நோக்கும் போது ஒழுக்கமிகு தமிழ் சமுதாயத்தின் அடித்தளமாக விளங்குகிறது. தமிழ் இலக்கங்களாக தமிழ் எழுத்துக்களே பயன்பட்டு வந்துள்ளமையும் தனியான ஓர் விடயமாகும். ஒன்று – ககரமும் (க) இரண்டு உகரமும் (உ) மூன்று நுகரமும் (நு) நான்கு சகரமும் (ச) ஐந்து குகரமும் (கு) ஆறு சாகரமும் (ச) ஏழு எகரமும் (எ) எட்டுக்கு அகரமும் (அ) ஒன்பதுக்கு கூகாரமும் (கூ) பத்துக்கு ககரத்தோடு பூச்சியமும் (க° ) அல்லது யகரமும் பயன்படுத்தப்பட்டுள்ளதை பார்க்கக் கூடியதாக உள்ளது.

தமிழ் மொழியில் முக்கியமான மற்றுமொரு கருத்தும் உள்ளது. முதனிலை, இடைநிலை இறுதிநிலை எழுத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டிருப்பதாகும். இம்மரபு ஆச்சிரியத்திற்குரிய ஒரு விடயமாகும். எனவே தமிழ் எழுத்துக்களில் தனித்துவம் குறித்து சிந்திக்கின்ற போது இன்னும் பல உண்மைகள் வெளிவரலாம். இது பற்றிய ஆய்வுகளானது தமிழர் தமிழை விளங்கிக் கொள்வதற்கு மிகவும் பெரிதாக துணைப்புரியும் என்பது தெட்டத் தெளிவான உண்மை.

"வாழ்கத் தமிழ் வளர்க தமிழினம். ஓங்குக தமிழ் மொழி"

ஆக்கம்
**திருமதி. சுந்தரமூர்த்தி ராஜ்வதனி**
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு




ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

மகனே வெளிநாடு சென்று
உடைப் பெட்டியுடன்
வருவாயென காத்திருந்தேன்
உன் மடிந்த உடல் அல்லவா
பெட்டியில் வந்தது.

தொகுப்பு
**ஞா. தினேஸ்**
*தரம் 5*



# தாய்

தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை
தாயின் அன்புக்கும் பாசத்திற்கும்
என்றுமே இல்லை எல்லை.
தாயின் அன்பு வற்றாதது
அன்னைதான் எமது கண் கண்ட தெய்வம்
தாயே கோயில் தாயே தெய்வம்.

**பா. இந்துஜன்**
*தரம் 2*

# இலங்கைப் பற்றிய சிறுதுளி



எமது நாடு – இலங்கை
தேசிய மரம் – நாகமரம்
தேசிய மலர் – நீலோற்பலம்
தேசியப் பறவை – காட்டுச் சேவல்
தேசிய மிருகம் – மர அணில்
தேசிய உணவு – சோறு
தேசிய விளையாட்டு – கரப்பந்து
தேசியக் கொடி – சிங்கக் கொடி

தேசிய கீதம் – ஸ்ரீ லங்கா மாதா
குடியரசாகியது – 1972
சுதந்திரம் பெற்றது – 1948.02.04
பெரிய ஆறு – மகாவலி
தலை நகரம் – ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை

**திருச்செல்வம் குபேதா**
*தரம் 5*

# பழமொழிகள்

**அழுத பிள்ளை பால் குடிக்கும்**

**முயற்சி செய்தால் பயன் கிடைக்கும்**

**ஆழம் அறியாமல் காலை விடாதே**

**எதையும் ஆராய்ந்து செய்**

**கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை**

**எல்லோருக்கும் எல்லாம் தெரியாது.**

**அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.**

**விடா முயற்சி பலன் தரும்**

**அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு**

**ஒற்றுமையே பலம்.**

**காற்றுள்ள போதே தூற்றிக் கொள்**

**சந்தர்ப்பத்தை தவற விடக்கூடாது.**

**யோகேஷ்வரன் தரன்யா**
தரம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப கல்வி புலமும் ஆசானும்

மண்ணில் பிறந்த பிறவிகளின் மகத்தான பிறவி மனிதப்பிறவியாகும். அப்பிறவி தனது வாழ்க்கையினை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் மாறி வரும் உலகிற்கு முகம் கொடுப்பதற்காகவும் கட்டாய கல்வி கற்றே ஆக வேண்டும். என்ற கட்டாய சூழ்நிலையில் திகழ்கின்றான். அந்த வகையில் கல்வியை பெற்றுக் கொள்வதற்காக கல்விக் கூடங்களிலும் சென்று முறையாக கற்கை நெறிகளை பின்பற்றுவது காணக்கூடியதாகவுள்ளது.

அந்த வகையில் பாடசாலைக்கல்வியில் ஆரம்ப கல்வி புலத்தின் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் பற்றி சற்று நோக்குவோமாயின் முதலாவதாக சூழல் பற்றி நோக்க வேண்டும். பிள்ளை தொடர்பு கொள்ளும் குடும்ப சூழல் அதனோடு தொடர்புடைய பின்னணி என்பவற்றைப் பார்க்கலாம். சிறந்த கல்வி கற்ற குடும்ப பின்னணியில் இருந்து வருகின்ற பிள்ளைகள் கற்றலில் மிக வேகமாக ஆர்வம் காட்டக்கூடியதை காணலாம். இப்பிள்ளைகளுக்கு தாய், தந்தையரின் நிறமூர்த்த செல்வாக்கும், தாய் கருவுற்று இருக்கும் போது தாயின் நடத்தைகள், பழக்கவழக்கங்கள் இதமான இசை கேட்டல், பாடல், சித்திரங்களை ரசித்தல் கலை நுட்ப வேளைகளில் தாய் ஈடுபடல் என்பவற்றின் ஊடாக கருவிலே இருக்கின்ற குழந்தையும் கற்றுக்கொள்கிறது. இதனைதான் நம்முன்னோர்கள் “கருவிலே திருவுடையான்” என்று கூறுவார்கள்.

கருவில் இருக்கும் குழந்தை தாயின் செயற்பாடுகளினூடாக பல்வேறு விடயங்களை பெற்றுக் கொண்டு வருகின்றார்கள். இவ்வாறான பிள்ளைகளை ஆரம்ப கல்வி புலத்தில் மிளிர்வதை காணலாம். இருந்த போதும் பொருளாதார பிரச்சினைகளின் நிமித்தம் தாயும் தந்தையும் வேலைக்கு சென்று மன உளைச்சல் உடல் உழைப்புக்கு மத்தியில் கருவிலே பிள்ளைகளை சுமந்து பெற்றெடுத்து ஏனையவர்களின் அரவணைப்பில் வளர்த்து முன்பள்ளிக்கு செல்லாது பாடசாலைக் கல்வியை கற்க வரும் பிள்ளைகளையும் ஆரம்ப கல்வி புலத்திலே கற்பிக்கும் ஆசிரியர்கள் சந்திக்கின்றார்கள். அத்தோடு ஆடம்பரமான தொலைகாட்சி பாவனை, இணையத்தள தொடர்பாடல் போன்ற பாவனைகள் மற்றும் வெளியார் தொடர்புகள் கூடிய குடும்ப பின்னணியில் இருந்து வருகின்ற பிள்ளைகளையும் சந்திக்கின்றார்கள். எந்த சூழலில் இருந்து வந்த போதும் ஆரம்ப கல்வி ஆசிரியர்களும் இவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் நடத்தை மாற்றத்திற்கும் வகைக்கூற கூடியவர்களாக திகழ்கிறார்கள்.

எனவே கல்வியலாளர்களும் பிள்ளை உளவியளாளருமான ஜெரம் புறுனர், விக்கொட்ஸ்கீ, ஜீன் பியாஜே, தோன்டைக், பிளேட்டோ, மொண்டசூரி போன்றவர்கள் பல்வேறு சூழலில் உள்ள பிள்ளைகளை ஆய்வுக்குற்படுத்தி பார்த்ததன் முடிவாகஎல்லா பிள்ளைகளாலும் கற்றுக் கொள்ள முடியும். என்ற உண்மையினை முன்வைத்துள்ளனர். இதனை ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் நன்கு புரிந்துக்கொண்டு எந்தப்பிள்ளையானாலும் கற்றுக்கொள்ள முடியும் எண்ணத்தோடு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் தனது வகுப்பறையில் உள்ள பிள்ளைகளை நன்கு புரிந்துக்கொண்டு அவர்களின் இயலும் இயலாமைக்கு ஏற்ப செயற்பாடுகளை வடிவமைக்க வேண்டும். பல்வேறு நிலைகளில் அதாவது மெல்ல கற்போர், மீத்திறன், நடுநிலையானவர்கள் என்று வகுப்பறையில் காணப்படுகின்ற போதிலும் அவர்களுக்கே புரியும் நிலையில் கற்பித்தல் திட்டமிடலை மேற்கொண்டு வெற்றி காண வேண்டும்.

ஆரம்ப கல்வியில் வகுப்பறை முகாமைத்துவம் பற்றி பல்வேறு உளவியலாளர்கள் பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அந்த வகையில் மொண்டசூரி அம்மையாரால் முன்வைக்கப்பட்ட கல்வி சிந்தனையில் கல்வி ஓர் இயற்கையான செயன்முறை என்ற வகையிலே கல்விச் செயன்முறைக்கு உதவுதலே ஆசிரியரின் பணியாகும். தான் வகுப்பறையிலே இருந்தாலும் இல்லாவிட்டாலும் செயற்பாடுகள் யாவும் ஒழுங்காக நடைபெறும் வகையில் திட்டமிட்டு செயற்படுத்தும் ஆசிரியரே தேர்ச்சி மிக்க ஆசிரியராவார் எனபது அம்மையாரின் கருத்தாகும்.

அதே போன்று உண்மையான ஆட்சியாளரை உருவாக்கி கொள்ளும் எதிர்பார்க்கையை நிறைவேற்றி கொள்வதற்காக சிறுவயதிலேயே கல்வியை தொடங்க வேண்டும் என்பது பிளோட்டோவின் கருத்தாகும். மேலும் இவர்கருதுவது சரியான உடலியல் சுகாதார நற்பழக்கவழக்கங்களை ஏற்படுத்தல் நல்ல மனப்பாங்கு வளர்ச்சியை ஏற்படுத்தல், இசையோடு கூடிய விளையாட்டுக்கள், அழகியல் செயற்பாடுகள் ஆகியவற்றை பழகுதல் வாழ்க்கையின் ஆரம்ப கட்டமே. பிள்ளையை பயிற்றுவிக்க உகந்த காலகட்டமடாகும். அதனால் சங்கீதம், ஜிம்னாஸ்டிக் முதலிய பாடங்கள் மற்றும் அறிவொழுக்க விருத்திக்கு உதவக்கூடிய கதைகளை சொல்லிக்கொடுத்தல் என்பன ஆரம்பக் கல்வியில் முக்கிய இடம் வகிக்கின்றது என்று பிளேட்டோ கருதுகிறார்.

இன்றைய நவீன உலகில் பிள்ளைகளின் சிந்தனை வளர்ச்சியும் மிக வேகமாகவே வளர்ச்சி கண்டு வருகிறது. இந்த சூழ்நிலையில் இவர்கள் மிக விரும்பக்கூடிய வகையிலும் உயிரோட்டமான நவீன கற்பித்தல் முறைகளையே கையாள வேண்டும். பல்லூடக கற்பித்தல் முறை, கணிணி முறை, சம்பாசனை, நாடகம், விளையாட்டு முறை, பரிசோதணை, களப்பயணம், வினா விடைப் போட்டிகள், விவாத மேடை முகாம்கள் நடத்துதல், மன்றங்கள் மற்றும் சிறுவர் கதைகள், நகைச்சுவை துணுக்குகள், சித்திர கதைகள், கலந்துரையாடல் போன்ற கற்பித்தல் முறையை மேற்கொள்ளலாம்.

இதற்காக பாடசாலை அதிபர, ஆசிரியர்கள், மேல்வகுப்பு மாணவர்கள், பிரதேசத்தில் இனங்காணப்பட்ட வளவாளர்கள், சமுக முன்னோடிகள் ஆகியோர்ரையும் உள்வாங்கி பிள்ளைகள் கற்றுக் கொள்வதற்கான வழிகளைக் காட்டுவதே சிறந்ததாகும்.
அடுத்ததாக ஆரம்பப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களிடத்தில் சிறந்த விழுமிய பண்பை எவ்வாறு ஏற்படுத்துவது என்பது பற்றி சற்று கவனம் செலுத்த வேண்டும். நற்பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுக்க முடியாவிட்டாலும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளையும், கொடுக்க வேண்டும். இதற்கு எல்லா வகையிலும் முன்னோடியாக திகழ்பவர்கள் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப்பிரிவு பிள்ளைகளிடத்தில் இயல்பாக போலச் செய்தல், பின்பற்றுதல் போன்ற பண்புகள் அதிகமாய் இருக்கின்ற படியினால் ஆசிரியர்களின் நடத்தைகளில் முன்மாதிரியாக இருத்தல் வேண்டும். சக ஆசிரியர்களுடன் உரையாடும் போதும் கல்வி அதிகாரிகளிடம் உரையாடும் போதும் ஏனைய சந்தர்பங்களிலும் நடந்து கொள்வது எனபன பிள்ளைகளின் பண்பு விருத்திக்கு வித்திடுவதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

எனவே ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் மிக உன்னதமானவர்கள் இவர்கள் பிள்ளைகளிடத்தில் அன்பாகவும் பணிவாகவும் நடந்து கொள்ள வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் கோபம் கொள்ளக் கூடாது, தண்டனை வழங்கக் கூடாது தண்டிக்கப்படும் பிள்ளை தீவீரவாதத்தை கற்றுக்கொள்ளும் என்பது உளவியலாளர்களின் முடிவாகும். தண்டனை மூலம் தற்காலிக மாற்றத்தையே ஏற்படுத்த முடியும். நிரந்தரமான நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் விருப்புடன் கல்வியைத் தொடர பிள்ளை நேய பாடசாலை ஒன்றினை ஏற்படுத்திக் கொடுப்பது தலையாய கடைமையாகும். பாடசாலையில் மலர் பாத்திகள் அமைத்தல், சிறுவர் பூங்கா அமைத்தல் புகழ் மிக்க அறிஞர்களுக்கு சிலை வைத்தல், ஆலயம் அமைத்தல், சிறந்த நூலகம் அமைத்தல், பாடசாலை உள்ளக வீதி ஒழுங்குகள் சுவர் சித்திரங்கள் வரைதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக ரம்மியமான பாடசாலை சூழலை அமைத்து நாளைய உலகை வெற்றி காணும் தலைவர்களை உருவாக்குவது சிறப்பை தரும்.

நன்றி

**திரு. மு. ஸ்ரீகோணேஸ்**
Dip. in Pri- Edu.
பது/ஊவாக்கலை த.வி

# பொது அறிவு

1. உலகின் முதல் பெண் பிரதமர் யார்?
   **சிறிமாவோ பண்டார நாயக்க.**
2. இலங்கையின் தேசிய மரம் எது? **நாக மரம்**
3. இறுதியாக ஒலிம்பிக் விளையாட்டு எத்தனையாம் ஆண்டு இடம் பெற்றது? **2012**
4. வொலிபோல் விளையாட்டில் ஒரு அணியில் இடம்பெறும் வீரர்களின் எண்ணிக்கை யாது? **6**
5. ஒரு மனிதரில் சராசரியாக இருக்க வேண்டிய பற்களின் எண்ணிக்கை? **32**

**யோ. ரீசினி**
தரம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை...

- ❖ பகைமையினால் தணிவதில்லை அன்பினாலே தணியும்.
- ❖ பல விடயங்களை ஒரே சமயத்தில் தொடங்குபவன் எதையும் முடிக்க மாட்டான்.
- ❖ ஒரு நாணயத்தின் இரு புறமும் போன்றது அன்பும், கடவுளும்.
- ❖ துணிவுள்ள மனத்தின் அறிகுறி உழைக்கும் கரங்களே!
- ❖ எளிமையும் உழைப்பும் தான் திருப்தியுள்ள வெற்றியைத் தரும்.
- ❖ அன்பு கொடுப்பவரையும் பெறுபவரையும் குணமடைய செய்கிறது.

**வி. துசேந்திரன்**
*தரம் 2*

# பொது அறிவு...

- *தாமரை வித்து 400 ஆண்டுகளுக்குப் பின்னரும் முளைக்கும்*
- *இடம் விட்டு இடம் நகரும் தாவரம்*
  *கிளாபிடோ மோனஸ் தாவரம் ஆகும்.*
- *உலகிலேயே மிகப்பெரிய தனி இலையுடைய தாவரம் ராட்சத நீல அல்லி ஆகும்.*
- *பாலைவனத்தில் மட்டும் இருக்கும் தாவரம் - ஸீரோபைட்ஸ் தாவரம் ஆகும்.*
- *கிரிகெட் மட்டை செய்ய பயன்படுத்தப்படும் மரம். - விலோ மரம்*
- *அமெரிக்காவில் சிக்காகோ நகரம் காற்று நகரம் என அழைக்கப்படுகிறது.*
- *உலகிலேயே சனத்தொகை கூடிய நாடு - சீனா*
- *இலங்கையின் கலாசார முக்கோண பிரதேசங்கள்*
  *கண்டி, பொலன்னறுவை, அனுராதபுரம்*
- *கண்டி தலதாமாளிகையை அமைத்த மன்னன் - விமலதர்ம சூரியன்*
- *மரச்செதுக்கல் கலைக்கு பெயர் பெற்ற இடம் - எம்பக்க தேவாலயம்*

**மனோகரன் தனுசிகா**
*தரம் 05*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கக் கல்வியின் அவசியம் ஓர் பார்வை..!

"நன்மை செய்தவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார். திண்மை செய்பரே – அண்டித்
தீண்ட ஒன்னாதார்"
(தேசிய கவி விநாயகம் பிள்ளை)

நமது பாடசாலையை அண்மித்த சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களே தமது பாடசாலைகளிலும், ஒழுக்கத்திலும் கலாசாரத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

அதாவது யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவன் செய்த செயல், அவனின் பண்பு, செம்மை, பொருத்தப்பாடு என்பன சீராக இருக்க வேண்டும். பொது சமூகத்தில் மக்கள் பிரிவினரால் அவனின் நடத்தைகள் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதாக இருக்க வேண்டும். இப் பிரதேசங்களில் மதுபாவனை அதிகரித்து வருகின்ற படியால். பாடசாலைக்கு வருகின்ற பள்ளி சிறார்கள் பெரும் தாக்கத்துக்கு உள்ளாகின்றார்கள். அதுமட்டுமல்லாது தொலைத்தொடர்பு சாதனங்களாலும் (தொலைக்காட்சி, ரேடியோ, DVD, கைபேசி, CD, பென்ரைவு சிப்) வீட்டிலுள்ளோர், பிள்ளைகள், அயலவர்கள் போன்ற பலரும் பெருவாரியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கினறார்கள். இவ்வாறான சமூக அங்கத்தினரால் மாணவர்களின் கல்விச் செயற்பாகளை முறையாக தொடர முடியாத நிலை ஏற்படுகிறது. பாடசாலை மகிழ்ச்சிகரமான ஓர் இடம் என்றாலும் இவ்வாறான காரணிகள் பிள்ளைகளின் மனதை பெரிதும் பாதிக்கின்றன.

சமூகத்தின் கருத்துப்படி சில நடத்தைகள் சரியானவை, பொருத்தமானவை என ஏற்றுக் கொள்ளத் தக்கவை. சில நடத்தைகள் தவறானவை பொருத்தமற்றவை. அதற்கு தான் "அரிஸ்டோடில் கூறுகிறார் ஒருவர் செய்ய தக்கவை, செய்யத்தகாதவை சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை செய்வதனால் அச்சமூகத்தினால் அவனை மதிக்கப்படுவதே ஒழுக்கமாகும். அதே போல் " எலிசபத் ஹார் லொக்" என்பவர் கூறுகிறார். ஒருவன் தான் உள்ளடங்கும் குழுவின் (சமூகம்) சட்டக் கோவைகளுக்கு அமைவாதல், அவற்றை பின்பற்றலுமே ஒழுக்கம் என்கிறார். உண்மைதான் ஒழுக்கம் என்பதில் மனிதன் ஒரு சமூக பிராணியாதலால் அவன் தனித்து வாழ முடியாது. அவன் சார்ந்த சமூகத்தில் பண்பாடுகளைப் பேணுதல், மரியாதை செலுத்தும் முறைகள் பாரம்பரியங்கள், வழக்காறுகள், கலாசாரம் விழுமியங்கள் எனபவற்றை ஏற்றுக் கொள்வதும் பின்பற்றுதலும் ஒருவருடைய கடமையாகும். அவ்வாறு மேற்கூறப்பட்ட சட்டத்திட்டங்களை மதிக்காது, ஏற்றுக் கொள்ளாவிடின் அச்சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படுகின்றான். ஒருவனது ஒழுக்கமான நடத்தை தீர்மானிக்கப்படுவது அதனுடன் தொடர்புடைய நம்பிக்கைகள் மனப்பாங்குகள், பெறுமானங்கள் ஆகியவற்றுக் கிடையிலான சிறந்த பொருத்தப்பாட்டின் படியாகும்.

அதனால் சமூகத்தின் அங்கத்தவனான மனிதன் வாழப் பிறந்தவன். நம்முடைய சமூகம் எனது பிள்ளைகள் எங்கள் கடமை என உணர்ந்து ஏனைய துறை சார்ந்தோருக்கு மதிப்பளிக்க அறிந்திருத்தல் அவசியமானது. பெரியோரை மதித்தல், பெரியோரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்தல், மதுபாவனை ஒழித்தல் வேண்டும். காரணம் நம் பிள்ளைகளுக்கு பாகாதுகாப்பு, சிறந்த கல்வி போன்ற அத்தியாவசியங்கள் அவசியமானது.

ஆம் எனது செயல்கள் நாமாக விரும்பி பொருத்தப்பாடுடையவையாக செய்கின்ற போது அவை ஒழுக்க நடத்தையாகின்றன. ஒழுக்கக் கல்வியின் மூலம் வெற்றி பெற முடியும். வேலை உலகிற்கு தயார் செய்வதற்கு சமூக முரண்பாடுகளை தீர்ப்பதற்கு இலக்குகளை அடைவதற்கு, கலாசார விழுமியங்களை கட்டியெழுப்புவதற்கு, நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு, வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு, தனது வாழ்வை பாதுகாப்பதற்கு, நல்ல குடும்ப சூழலை உருவாக்குவதற்கு இன்னும் பல்வேறுபட்ட ஒழுக்கக் கல்வி நம் சமூகத்திற்கும் பிள்ளைகளுக்கும் கட்டாய கல்வியாகும்.

சமூத்தில் வாழும் ஒருவனுக்கு சமூக சீரழிவு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு, நல்லப் பண்புகளை மாணவரிடையே வளர்ப்பதற்கு, பொறுப்பேற்று வகைகூறலுக்கு, அவன் சமூக பிரஜையாக வேண்டும். அவ்வாறு சமூக பிரஜையாவதற்கு முதலில் ஒழுக்கக் கல்வியின் தேவைப்பாடு ஒரு நோக்கமாக கொள்ளப்பட வேண்டும். ஒழுக்கக் கல்வியோடு இணைந்த ஒன்றுதான் விழுமியங்கள் (values) “இல்லை என்று ஒரு போதும் சொல்லாதே, என்னால் இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதே” என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார். மனிதனாக பிறந்த ஒவ்வொருவனுக்கும் நம்பிக்கை உண்டு, மன உறுதியுண்டு, அளவற்ற சக்கியுண்டு. தனது சக்தியை அறிந்து செயற்பட்டோமானால் எதையும் செயற்படுத்த முடியும். விழுமியங்களாக கொள்ளப்படும் நற்பண்புகளை சமூகத்தினரிடையே வளர்க்க முடியும் சமூகத்தின் மிக முக்கியமான புரு'லட்சணங்களாவன மகிழ்ச்சி, இரக்கம், கருணை, நேர்மை, தைரியம், நட்பு கொடுமை, உண்மை, களவு தவிர்த்தல், அகிம்சை, வினைத்திறன், நியாயம், பணிவு மகிமை, சுபீட்சம், சமாதானம், அஞ்சாமை, இன்சொல , சகிப்புத் தன்னை, போன்ற நல் விழுமியக் கருத்துக்களை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். அப்போது தான் நம் சமூகங்களில் ஒரு மாற்றத்தை காணலாம். நல்ல வினைத்திறனான சமூகத்தை எழுச்சிப்பெற செய்யலாம். மானுடனே நீ ஒவ்வொருவனும் உன் மனதில் திடம் கொள். உன் சமூகத்தில் நீ நல்ல உயர்ந்தப் பிரஜையாக வாழ வேண்டுமானால் ஒழுக்கங்களையும், விழுமியங்களையும் கற்றுக் கொள். பிறருக்கு கற்றுக் கொடு.

*“கண்ணுடையர் எனபர் கற்றோர் - முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லாதவர்”.*

(குறள்)

தொகுப்பு
**I. கோகிலவாணி** *(ஆசிரியை)*
பது/ஊவாக்கலை த.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலை கஞ்சி வழங்கல்



சர்வதேச ஆசிரியர் தினம் 2012






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழியும் அதன் கருத்துக்களும்

- அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் புறத்தி புறத்தி தான் - (இனத்துடன் சேராமை)
- ஆடு நனைக்கிறது என்று ஓநாய் அழுததாம் - (போலிக் கண்ணீர்)
- இளமையில் கல்வி சிலையில் எழுத்து. (சிறு வயதில் கற்கும் கல்வி என்றைக்கும் அழியாது)
- ஈர நாவிற்கு எலும்பில்லை - (எதையும் பேசுதல்)
- உண்மை சொல்லி கெட்டவரில்லை. - (உண்மையின் உயர்வு)
- ஊரோடு ஒத்து வாழ். - (உலக நடையறிந்து வாழ வேண்டும் )
- எலி அழுதால் பூனை விடுமா? - (இரக்கமற்ற தன்மை)
- ஏழைப்பேச்சி அம்பலம் ஏறாது - (பொருளீட்டலின் அவசியம்)
- ஐயமான காரியத்தை செய்தல் ஆகாது - (சந்தேகத்துக்குறிய செயலை செய்யக் கூடாது)
- ஒருகாசு பேணின் இருகாசு தேறும். - (சேமிப்பின் முக்கியத்துவம்)
- ஓட்டைப் பானையிலும் சக்கரை இருக்கும். - (யாரையும் குறைத்து மதிப்பிடக்கூடாது)
- ஔவை சொல்லுக்கு அச்சம் இல்லை. - ( ஔவையார் கூறின் சிறப்பு)

**சீ. ஜெனிட்டா**
தரம் 4

# படித்து சுவைத்தவை

ஒவ்வொரு ஆணும் மறக்கக் கூடாத கவிதை

"உன்னை கருவில் சுமந்த பெண்ணையும்"
உன் கருவை சுமக்கும் பெண்ணையும்"
நீ கல்லறை செல்லும் வரை நேசி

நட்பை விலைக்கு வாங்க முடியாது
தகுதியானவர்களுக்கு
இலவசமாக வழங்கப்படும்

நேர்முக தேர்வு சென்று வந்தேன்.
அப்பா கேட்டார் "வேலை கிடைக்குமா?"
தங்கை கேட்டால் "எவ்வளவு சம்பளம்?"
அண்ணன் கேட்டான் "பர்மனேட் வேலையா?"
தம்பி கேட்டான் "எப்ப வேலைக்கு சேரனும்?"
ஆனால்
அம்மா கேட்டாள் "மதியம் சாப்பிட்டியா?"

நன்றி இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருமை மிக்க நமது ஆத்திசூடி

1. அறம் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அகம் சுருக்கேல்
14. கண்டொன்று சொல்லேல்
15. ஙப் போல் வளை
16. சனி நீராடு
17. ஞயம்பட உரை
18. இடம்பட வீடு எடேல்
19. இணக்கம் அறிந்து இணங்கு
20. தந்தை தாய்ப் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர் செய்
23. மண் பறித்து உண்ணேல்
24. இயல்பு அலாதன செய்யேல்
25. அரவம் ஆட்டேல்
26. இலவம் பஞ்சில் துயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகு அலாதன செய்யேல்
29. இளமையில் கல்
30. அரனை மறவேல்
31. அனந்தல் ஆடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்

1. Learn to love virtue.
2. Control anger.
3. Don't forget Charity.
4. Don't prevent philanthropy.
5. Don't betray confidence.
6. Don't forsake motivation.
7. Don't despise learning.
8. Don't freeload.
9. Feed the hungry and then feast.
10. Emulate the great.
11. Discern the good and learn.
12. Speak no envy.
13. Don't shortchange.
14. Don't flip-flop.
15. Bend to befriend.
16. Shower regularly.
17. Sweeten your speech.
18. Judiciously space your home.
19. Befriend the best.
20. Protect your parents.
21. Don't forget gratitude.
22. Husbandry has its season.
23. Don't land-grab.
24. Desist demeaning deeds.
25. Don't play with snakes.
26. Cotton bed better for comfort.
27. Don't sugar-coat words.
28. Detest the disorderly.
29. Learn when young.
30. Cherish charity.
31. Over sleeping is obnoxious.
32. Constant anger is corrosive.
33. Saving lives superior to fasting.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. கிழமைப்பட வாழ்
35. கீழ்மை அகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்பது ஒழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட்டு ஒழி
43. கௌவை அகற்று
44. சக்கர நெறி நில்
45. சான்றோர் இனத்து இரு
46. சித்திரம் பேசேல்
47. சீர்மை மறவேல்
48. சுளிக்கச் சொல்லேல்
49. சூது விரும்பேல்
50. செய்வன திருந்தச் செய்
51. சேரிடம் அறிந்து சேர்
52. சையெனத் திரியேல்
53. சொற் சோர்வு படேல்
54. சோம்பித் திரியேல்
55. தக்கோன் எனத் திரி
56. தானமது விரும்பு
57. திருமாலுக்கு அடிமை செய்
58. தீவினை அகற்று
59. துன்பத்திற்கு இடம் கொடேல்
60. தூக்கி வினை செய்
61. தெய்வம் இகழேல்
62. தேசத்தோடு ஒட்டி வாழ்
63. தையல் சொல் கேளேல்
64. தொன்மை மறவேல்
65. தோற்பன தொடரேல்
66. நன்மை கடைப்பிடி
67. நாடு ஒப்பன செய்
68. நிலையில் பிரியேல்
69. நீர் விளையாடேல்
70. நுண்மை நுகரேல்
71. நூல் பல கல்
72. நெற்பயிர் விளைவு செய்
73. நேர்பட ஒழுகு
74. நைவினை நணுகேல்
75. நொய்ய உரையேல்

34. Make wealth beneficial.
35. Distance from the wicked.
36. Keep all that are useful.
37. Don't forsake friends.
38. Abandon animosity.
39. Learn from the learned.
40. Don't hide knowledge.
41. Don't swindle.
42. Ban all illegal games.
43. Don't vilify.
44. Honor your Lands Constitution.
45. Associate with the noble.
46. Stop being paradoxical.
47. Remember to be righteous.
48. Don't hurt others feelings.
49. Don't gamble.
50. Action with perfection.
51. Seek out good friends.
52. Avoid being insulted.
53. Don't show fatigue in conversation.
54. Don't be a lazybones.
55. Be trustworthy.
56. Be kind to the unfortunate.
57. Serve the protector.
58. Don't sin.
59. Don't attract suffering.
60. Deliberate every action.
61. Don't defame the divine.
62. Live in unison with your countrymen.
63. Don't listen to the designing.
64. Don't forget your past glory.
65. Don't compete if sure of defeat.
66. Adhere to the beneficial.
67. Do nationally agreeable.
68. Don't depart from good standing.
69. Don't jump into a watery grave.
70. Don't over snack.
71. Read variety of materials.
72. Grow your own staple.
73. Exhibit good manners always.
74. Don't involve in destruction.
75. Don't dabble in sleaze.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| | |
|---|---|
| 76. நோய்க்கு இடம் கொடேல் | 76. Avoid unhealthy lifestyle. |
| 77. பழிப்பன பகரேல் | 77. Speak no vulgarity. |
| 78. பாம்பொடு பழகேல் | 78. Keep away from the vicious. |
| 79. பிழைபடச் சொல்லேல் | 79. Watch out for self-incrimination. |
| 80. பீடு பெற நில் | 80. Follow path of honor. |
| 81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ் | 81. Protect your benefactor. |
| 82. பூமி திருத்தி உண் | 82. Cultivate the land and feed. |
| 83. பெரியாரைத் துணைக் கொள் | 83. Seek help from the old and wise. |
| 84. பேதைமை அகற்று | 84. Eradicate ignorance. |
| 85. பையலோடு இணங்கேல் | 85. Don't comply with idiots. |
| 86. பொருள்தனைப் போற்றி வாழ் | 86. Protect and enhance your wealth. |
| 87. போர்த் தொழில் புரியேல் | 87. Don't encourage war. |
| 88. மனம் தடுமாறேல் | 88. Don't vacillate. |
| 89. மாற்றானுக்கு இடம் கொடேல் | 89. Don't accommodate your enemy. |
| 90. மிகைபடச் சொல்லேல் | 90. Don't over dramatize. |
| 91. மீதூண் விரும்பேல் | 91. Don't be a glutton. |
| 92. முனைமுகத்து நில்லேல் | 92. Don't join an unjust fight. |
| 93. மூர்க்கரோடு இணங்கேல் | 93. Don't agree with the stubborn. |
| 94. மெல்லி நல்லாள் தோள்சேர் | 94. Stick with your exemplary wife. |
| 95. மேன்மக்கள் சொல் கேள் | 95. Listen to men of quality. |
| 96. மை விழியார் மனை அகல் | 96. Dissociate from the jealous. |
| 97. மொழிவது அற மொழி | 97. Speak with clarity. |
| 98. மோகத்தை முனி | 98. Hate any desire for lust. |
| 99. வல்லமை பேசேல் | 99. Don't self-praise. |
| 100. வாது முற்கூறேல் | 100. Don't gossip or spread rumor. |
| 101. வித்தை விரும்பு | 101. Long to learn. |
| 102. வீடு பெற நில் | 102. Work for a peaceful life. |
| 103. உத்தமனாய் இரு | 103. Lead exemplary life. |
| 104. ஊருடன் கூடி வாழ் | 104. Live amicably. |
| 105. வெட்டெனப் பேசேல் | 105. Don't be harsh with words and deeds. |
| 106. வேண்டி வினை செயேல் | 106. Don't premeditate harm. |
| 107. வைகறைத் துயில் எழு | 107. Be an early-riser. |
| 108. ஒன்னாரைத் தேறேல் | 108. Never join your enemy. |
| 109. ஓரம் சொல்லேல் | 109. Be impartial in judgments. |

தொகுப்பு
**R.S. முத்துக்குமார்**
*அதிபர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பா



**ஊவா** மாகாணத்தில்
ஊவாக்கலை என்னும் ஊராம்
ஊற்றெடுத்து ஆறுகள் பாயும்
அழகான கிராமம் - அதில்
மலை முகடுகளுக்கு மத்தியில்
மாணிக்கமாக
முத்தாக விளங்கும்
ஊவாக்கலை தமிழ் வித்தியாலயமே
*நீ வாழி !*

எழுபத்தைந்து ஆண்டுகள் கடந்து
எழுந்து தலை நிமிர்ந்து நிற்கின்றாய்
ஏற்றங்கள் பல கண்ட – நீ
மாற்றங்கள் பல சந்தித்து
மாணவர் நேயானய் - நீ
மாற்றங்களை விரம்பும்
மலையகத்தின் முத்தே
முத்துக்குமரா நீ வாழி !

கால மாற்றத்தால் நீ
கண்டு வந்த
சவால்கள் எத்தனையோ
உன் பாதையில் பல அதிபர்களையும்
பல ஆசான்களையும் கண்டாய்
ஊவாக்கலை தமிழ் வித்தியாலயமே
*நீ வாழி !*

விளையாட்டுப் போட்டியா உன்னைக்
கண்டு வியக்கும் வையகம்
கலை விழாவா நீயே அதில் முதல்வன்
தமிழ் மொழித்தினப் போட்டிகளில்
நீ சூடிய வாகைகள் எத்தனையோ!
ஊவாக்கலை தமிழ் வித்தியாலயமே
*நீ வாழி !*

உலகறிய செய்து விட்ட
உத்தம தோட்டத் தொழிலாளியின்- பிள்ளைகளை
உன் உதிரம் தந்து உருவாக்கிய – பிள்ளைகளை
எம் உதிரம் தந்து ஏற்றிடுவோம் கல்விதனை
ஊவாக்கலை தமிழ் வித்தியாலயமே
*நீ வாழி !*

என்று வாழ்த்துக்கள் கூறும் இவர்
முன்னாள் அதிபர்
**T.சரவணபாவா**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From....

# Asha Jewellery

ආශා ජුවලරි

ஆஷா ஜாவலரி




**S. Manogar**
*Proprietor*

No. 292/ Main Street , Passara

**055 - 2288339**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From....*

# Studio Carmels



Studiocarmels@gmail.com

**055 - 2288327 / 055 - 2288676**

**072 - 7733300**

No. 448, Main Street, Passara



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From....*

# GANESHA TEX

Specialist in textiles, Gift items, Ever Silver, Fancy Goods,
Stationers, Food Ware Etc.



1 A, New Shopping Complex, Madulsima

**Tel : 055 - 2263600**

*With Best Compliments From....*

# PJ


# PRAGARSHIKA JEWELLERY

Genuine 22 Ct Gold Jewellery

K.Siva
**0777 - 6311079**

ප්‍රගර්ෂිකා ජුවලර්ස්

பிரகர்சிகா ஜுவலரி




No. 27 A, Beach Street, ( Opp Sea Street),
Colombo - 11
**Tel : 055 - 2263600 / 0112 336815**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From....*

# R. PRADEEPAN



22kt Gold Worker
Specialist in Bangal Worker

137 1/10, 1st Floor Sea Street, Colombo 11


*With Best Compliments From....*

# M. Yogeshwaran

Justice Of Peace

No. 01 , Main Street, Madulsima
**Tel : 055 - 2288107**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From....*

# SRI KRISHNA STORES

No. 01, Main Street, Madulsima

**Tel : 072 - 4308881**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From....*

# LAXMI STORES


P. Barathidhasan



No. 01 , Main Street, Madulsima




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From....*

# LAKSHMI STEELS

## லக்ஷ்மி ஸ்டீல்ஸ்

## ලක්ෂ්මි ස්ටීල්ස්

ANTON

Multilac
PREMIUM PAINTS

SINCE 1960
ලංකා
සංස්ථා වානේ

UltraTech
CEMENT
The Engineer's Choice

ගිංතොට
සංස්ථා
PLYWOOD

ORANGE
ELECTRIC

කේශර
සුපිරි අළුහුණු

No. 279, Main Street, Passara.

**Tel : 055-2288780**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்...

"கலை முரசு" நூலினை வெளியிடுவதற்கு எமது பாடசாலைக்கு அனுமதியை வழங்கிய கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும், ஆலோசனையும் உந்துதல்களையும் வழிகாட்டலையும் வழங்கி பெரும்பாடுப்பட்ட எமது அதிபர் திரு.R.S.முத்துக்குமார் அவர்களுக்கு முதற்கண் எமது அனைவர் சார்பான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.


இந்நூலுக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பும்,உடலுதவியும், பண உதவியும் நல்கிய பெற்றோர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.இது போன்றதொரு நூல் வெளி வர வேண்டுமாயின் நிதி வசதியில்லாது வெளியிடுவதென்பது மிகவும் சிரமமான காரியமே, அதுவும் பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் இக்காரியம் மிகமிக சிரமமே. அக்குறையை நிவர்த்தி செய்ய எமது பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் மனமுவந்து ஒரு தொகை முதலீட்டினை செய்தமையானது எமக்கு பலத்தைக் கூட்டியது. இந்த ஒத்துழைப்பினை நல்கிய ஆசிரிய நல்லுள்ளங்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் நிதி பற்றாகுறையினால் எமது நூலாக்க குழு செயலற்றுப் போயிருந்த சமயத்தில் மலர் வெளியீட்டுக்கு கரம் கொடுத்தவர்கள் வியாபார உரிமையாளர்களே. எனவே விளம்பரங்கள் கொடுத்துதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

சிலை அமைப்பதற்கு சகல வழிகளிலும் உதவிய திரு.S.அருணாசலம் அவர்களுக்கும், திரு.பிரதீப் அவர்களுக்கும் மற்றும் சிலை வடிவமைத்த கொத்தனுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது நூலுக்கு வாழ்த்துச் செய்திகளை வழங்கிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். ஊவாக்கலை கமநெகும கம்பனிக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். நிறைவாக இம்மலரினை சிறந்த முறையில் அச்சிட உதவிய பதுளை பிரவுன்கீ கிர.்.பிக்ஸ் அச்சக உரிமையாளர் மற்றும் ஊழியர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எமது பாடசாலை வளர்ச்சி படியை எட்டுவதற்கு பல வகைகளிலும் உதவிய,புத்தகத்தை "பவளவிழா" மலராக வெளியிட உதவிய பெயர் குறிப்பிடப்படாத அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் எமது பாடசாலை மலராக்கக் குழு பெருமிதமடைகின்றது.



மலராக்க குழு
பவளவிழா ஏற்பாட்டு குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From....*

SMH

# SRI MURUGAN HARDWARE

*Mulitilac paints , P.V.C Pipes, Hardware & Estate Suppliers Shell Gas Dealer*



No. 09 , New Complex ,
Main Street , Madulsima ,
Tele : 055- 2263625
Fax : 055- 2263625

P. Suresh
072- 7998000



*With Best Compliments From....*

# Astraluxumie

## *Jewell House*

## ඇස්ට්‍රලක්ෂ්මි

ස්වර්ණා මාලිගය

## அஷ்டலக்ஷ்மி

நகை மாளிகை

No. 289, Main Street , Passara

**055 - 2288035**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org